645
குண்டூசி
மே... 8 அணா.
மஹாலிங்கம்
ராஜகுமாரி
நடித்த
சிட்டாடலின்
இதய
கீதம்

ரெடி ஸ்டாக்கிலிருந்து கிடைக்கும்

வெள்ளை அச்சுக் காகிதம்-சூப்பர் காலண்டர்ட ஹார்ட் சைஸ்ட், பிளீச்ட் எம். ஜி. வெள்ளை போஸ்டர் காகிதம், மரம் சேராத (உட்-ப்ரீ) வெள்ளை ஆஸ்ட்ரியன் கிரீம் லெய்ட் காகிதம், எம். எப். டிஷ்யூ பேப்பர், வாட்டர் மார்க் உள்ள பாண்ட் வெள்ளைக் காகிதம், க்ரீஸ் புரூப் கிளேஸ் & ரப் காகிதம், வெள்ளை தபால் கார்டு போர்டுகள், மெக்கானிக்கல் நியூஸ் பிரின்ட் காகிதம் - - - - - -

விவரங்களுக்கும் விலைகளுக்கும் விசாரிக்கவும் :

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & ஸன்ஸ்,

2/34, தங்கசாலை தெரு, பி. டி. மதராஸ்.

தந்தி : "Metalmen"	டெலிபோன் : 55000.
206, ஒப்பணக்கார தெரு,	ஜெய்ஹிந்த் எஸ்டேட்ஸ் லிட்,
கோயமுத்தூர்.	புலேஷ்வர், பம்பாய்-2.

குதூகல ஆரம்ப விழா!

ஜூன் 2 உ முதல்

சென்னை—சித்ரா, மஹாராணி, மற்றும் பல முக்கிய நகரங்களிலும்

ஜூன் முதல்

வெள்ளித்திரையில்......
இதுவரைக் கண்டிராத
விறுவிறுப்பான
சம்பவங்கள் நிறைந்த
உல்லாசச் சித்திரம்....

J. ARTHUR RANK'S

நீலக் கடல்

அல்லது

சமுத்திர சுந்தரி

முதல் தமிழ்
டெக்னிக்கலர் படம்

EAGLE-LION

ஈகில்-லயன் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் (இந்தியா) லிட்.,
"கலீல் மான்ஷன்ஸ்" - 35, மவுண்ட் ரோட் - சென்னை-2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளி
களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

MEERANS

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னாட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில்
ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்

இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

மற்றும் ட்வீட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன.

எஸ். மீராசாகிப்
.....அண்ட் பிரதர்ஸ்....
38, ஈவ்னிங் பஸார் ரோடு & 19. கிடங்கு தெரு, சென்னை. 1

ரூ. 1000 பரிசு!

அற்புத சக்தி வாய்ந்த

மாய மோதிரம்

இந்த மோதிரம் மந்திர சக்தி, வசிய சக்தி இவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதன் சக்தி அற்புதமானது. இதை அணிபவர்களுக்கு கஷ்டமான காரியங்களும் சித்தியாகும். ஆபத்துகளிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் உங்களைக் காக்கும். கிரகங்களின் கெட்ட பலன்களை தடுக்கும். இதை அணிந்து கொண்டால், எப்பேற்பட்ட கல்நெஞ்சுடைய ஆண் பெண்களையும் உங்கள் சொல்படி நடக்கும்படிச் செய்துவிடலாம். காதல் விஷயங்களிலும், வழக்குகளிலும், உத்தியோகத் துறையிலும் நீங்கள் வெற்றிபெற்று தனவந்தராகலாம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இம்மோதிரம் உங்களுக்கு மெய்க் காப்பாளனாய் விளங்கும். இதை அணிந்த முதல் நாள் இரவே அதன் சக்தியைப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. வெளிநாடு : 5 ஷில்லிங் B.P.O.
மூன்று மோதிரங்களுக்கு ரூ. **3-8-0** தான்.
தபால் செலவு தனி. வெளிநாடு : 8 ஷில்லிங் B.P.O.

பலன் இல்லையென்று நிரூபித்தால் பணம் வாபீஸ்

Prop: **BENGAL MESMERISM HOUSE,** (*G.M.*) *Nakodar* (*Pb*).

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR (G.M.), JULLUNDUR CITY.

போட்டி நெ. 4.

தபாலில் போட கடைசி தேதி 12—6—50

பரிசு ரூ. 30,000

உத்திரவாதமான பரிசுகள்

ரிஜிஸ்டர்ட் பாம் 342

முடிவுகள் 18—6—50

42

முதல் பரிசு ரூ. 500; முழுதும் சரியான எல்லா விடைகளுக்கும் அளிக்கப்படும். இரண்டாம் பரிசு ரூ. 50, முதல் இரண்டு வரிசை மட்டும் சரியான விடைகளுக்கு. மூன்றும் பரிசு ரூ. 20, முதல் வரிசை மட்டும் சரியான விடைகளுக்கு. நான்காவது பரிசு ரூ. 3, முதல் வரிசை முதல் நம்பர் சரியான விடைகளுக்கு. நாங்கள் சீல் செய்துவைத்துள்ள விடைக்கு எண்ணுக்கு எண், வரிசைக்கு வரிசை சரியாக உள்ளதே சரியான விடை.

மேலேயுள்ள கட்டத்தில், 3 முதல் 18 வரை உள்ள எண்களை ஒரே முறை உபயோகித்து, வலமிருந்து இடமும், மேலிருந்து கீழும் மூலைக்கு மூலையும் கூட்டினல் மொத்தம் 42 வரும்படி அமைக்கவும்.

ஒரு விடைக்கு கட்டணம் ரூ. 1. ஆறு விடைகளுக்கு ரூ. 5. வெள்ளைக் காகிதத்தில் எழுதி ஒருவரே எத்தனை விடைகளை வேண்டுமானலும் அனுப்பலாம். கட்டணத் துகையை M.O. மூலமோ கிராஸ் செய்யப்படாத இந்திய போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்பவேண்டும். M.O. ரசிதை விடைகளுடன் வைத்தனுப்பவும்.

விடைகளை கடைசியாக 12—6—50ந் தேதி தபாலில் போடலாம். சீல் செய்துவைத்துள்ள சரியான விடை எம் காரியாலயத்தில் 15—6—50 மாலை 5-30 மணிக்கு வெளியிடப்படும். அச் சமயம் சென்னையிலுள்ள போட்டி நேயர்கள் நம் காரியாலயத்திற்கு வரலாம். இப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் எங்கள் தீர்ப்பே முடிவானது; சட்டப்படி கட்டுப்படுத்துவதும் ஆகும். இது போட்டி விதிகளில் ஒன்றுகும்.

கிஷோர் பஸில்ஸ் (ஜி.) 2/27, ஆர். எச். ரோடு, சென்னை-14

நெ. 2 போட்டியில் பரிசு பெற்றவர்கள் :—(1) ஸ்ரீ. ஏ. துரைசாமி, பங்களூர்-7; (2) எம். ஏ. தண்டபாணி, மாடர்பாக்கம். (3) டி. கோட்டய்யா, நெல்லூர். (4) பி. பாலகிருஷ்ணன், சத்திவேடு. மற்றும் ஏழு பேர்கள்.

மணம் மிக்க...

சாமிஸ் காபி

சோர்வைப் போக்கி

சுறுசுறுப்பை அளிக்கிறது

SAWMY'S COFFEE
MFG. CO.,
262, Netaji Subhash Chardra Bose Rd
G. T. MADRAS.

குண்டூசி

மே 1950

இந்த ஊசியில்

சென்ற வருஷத்திய சிறந்த படம்
—தலையங்கம் 7
உள்ளது உள்ளபடி
—"ஜடாயு" 8
எம். எஸ். சுந்தரி பாய்
—வாழ்க்கை வர்ணனை ... 10
எம். எஸ். சுந்தரி பாய்
—வர்ணப் படம் 17
மாதுரி தேவி
—ஆர்ட் படம் 18
பிலிம் பக்கடா 19
மிஸ். புஷ்பமாலதி (சிறுகதை)
—ராதாமணி 20
நுனிப்புல்
—"வெட்டுக்கிளி" 23
குண்டூசியைக் கேளுங்கள் ... 26
செய்திப் படங்கள் 31
பொதுஜனம் பேசுகிறார் 44
சூர்ய பிரபா
—ஆர்ட் படம் 51
வி. என். ஜானகி
—வர்ணப் படம் 52
அவள் ஒரு எக்ஸ்ட்ரா (சிறுகதை)
—சு. ரா. 53
சென்னை சினிமாத் தேர்தல் ... 57
இது செய்தி 61
தியேட்டர்களுக்கு லைசென்ஸ் ... 64
வைஜயந்தி அப்பீல் வழக்கு ... 65
குண்டூசி டைரி (மார்ச், ஏப்ரல்)... 67

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத்துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P.V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

TRADE MARK

தந்தி: நஸ்யம் மதருஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி
& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி
அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

பிரசித்திபெற்ற மணி மார்க் அலுமினியம் பாத்திரங்கள் தயாரிப்பவர்கள்

அழகப்பா இண்டஸ்டிரியல்ஸ்

வண்ணாரப் பேட்டை

மதராஸ் 21

குண்டூசி

பட்டை - 3 மே
ஊசி - 8 ஆசிரியர் : பி. ஆர். எஸ். கோபால் 1950

நிகரற்ற விநியோகமுள்ள சினிமா மாத வெளியீடு

சென்ற வருஷத்திய சிறந்த படம்

ஸ்ரீ. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி மந்திரியாய் இருந்த காலத்தில் தம் பெயர் விளங்கக் கூடிய ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டுப் போயிருக்கிறார். 'தமிழ், தெலுங்கு' பாஷைகளில் நல்ல படங்கள் வெளிவருவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும்' என்ற நோக்கத்துடன், வருஷா வருஷம் வெளிவரும் சிறந்த தமிழ், தெலுங்குப் படங்களுக்கு சர்க்கார் பரிசளிப்பதற்கு அவர் ஏற்பாடு செய்தார். பரீக்ஷார்த்தமாக சர்க்கார் ஒரு சிறந்த தமிழ்ப் படத்திற்கும், ஒரு தெலுங்குப் படத்திற்கும் ரூ. 500 வீதம் பரிசளிப்பதென்று தீர்மானித்தனர். படங்களைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு கமிட்டியையும் நியமித்தனர்.

இப்படப் போட்டியில் **கன்னியின் காதலி, நவஜீவனம், வாழ்க்கை** ஆகிய மூன்று படங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனவாம். இவற்றுள், **நவஜீவனம்** 1949-ம் வருஷத்திய சிறந்த படமாக கமிட்டியாரால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இதற்காக அப்படமுதலாளிகளான ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம்கம்பெனியாருக்கு நம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்ற வருஷத்தில் 25 படங்கள் வரை தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுள் மூன்றே படங்கள் மட்டும் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளதும், ஒரு தெலுங்குப் படம் கூடப் போட்டியில் சேர்க்கப் படாததும் ஆச்சரியத்தையே அளிக்கிறது. இதற்குக் காரணம், இப்பரிசுத் திட்டம் சரிவர விளம்பரம் செய்யப்படாதது காரணமாயிருக்கும் என்று கருதுகிறோம்.

போட்டிக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட மூன்று படங்களுள் **கன்னியின் காதலி**யும், **வாழ்க்கை**யும் பொழுது போக்கு நோக்கத்தையே முக்கியமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. **நவஜீவனம்** படமோ தொழிலாளி-முதலாளி பிரச்னையை அடிப்படையாகக் கொண்டது. இதிலிருந்து கமிட்டியினர் எந்த ஆதர்சத்துடன் படங்களைப் பரிசீலனை செய்தனர் என்பதை ஓரளவு ஊகிக்க முடிகிறது.

சென்னை சர்க்காரின் இப்பரிசுத்திட்டத்தை சினிமா உலகமும், நாமும் வரவேற்றுப் பாராட்டுகிறோம். அவர்கள் இந்த நல்ல காரியத்தை முதல் வருஷப் 'பரீக்ஷை'யுடன் நிறுத்திவிடாமல் வருஷா வருஷம் நடத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். படங்களின் தரம் உயர்வதற்கும், படத் தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்ஸாகம் அளிப்பதற்கும் இத்திட்டம் தூண்டுகோலாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

படங்களின் தரம் உயர்வதோடு கூட பட டெக்னிக்கும் உன்னத நிலையை அடைய வேண்டியது மிக அவசியமாகும். எனவே, அடுத்த வருஷம், படங்களைப் பரிசீலனை செய்ய நியமிக்கும் கமிட்டியில், பட நுணுக்கங்களில் தேர்ந்த ஞானமுடைய ஒருவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சில மாதங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட நாடகக் கழகம் சென்னையில் பதினான்கு சங்கீத, நாட்டியக் கச்சேரிகள், நாடகங்கள், ஆகியவற்றை நடத்தி விட்டுத் தன் ஆர்ப்பாட்டத்தை ஒருவாறாக முடித்துக் கொண்டிருக்கிறது.

கடைசி நாள் நாடகத்திற்கு மந்திரி கனம் பக்தவத்ஸலம் தலைமை வகித்ததோடல்லாமல், சில வார்த்தைகளையும் பேசினார்: "இக்கழகத்தின் நாடகங்களுக்கும் கச்சேரிகளுக்கும் ஏராளமான மக்கள் வந்திருப்பதிலிருந்து மக்கள் எப்படி நல்ல நாடகங்களைப் பார்க்க ஆவல் கொண்டிருந்தனர் என்பது வெளியாகிறது" என்று அவர் கூறினார். இதை முற்றிலும் உண்மை என்று என்னால் நம்ப முடியவில்லை. இந்தக் கழகத் தலைவர் டி. கே. ஷண்முகம் தம் நாடகக் கம்பெனிக்கு போதிய வசூல் இல்லை என்றே கம்பெனியை மூடினார். தலைவரும், மற்றவர்களும் முன்பே ஆடி, "வசூல் பெறாத" நாடகங்கள்தாம் இக்கழகத்தில் "மிகுந்த ஆதரவு" பெற்றுள்ளன. எனவே வெற்றியின் காரணம், "கழக நாடகங்கள் நல்ல நாடகங்களாய் இருந்ததனால்தான்" என்று கூறுவது சரியல்ல, கட்டணங்கள் குறைவாய் இருந்ததுதான் இதற்குக் காரணம் என்று வேண்டுமானால் கூறலாம்.

சரியான சேவையா ?

இருந்த இடம் தெரியாமல் போய்விட்ட நாடகக் கலைக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கத்துடன் இக்கழகம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இது நல்ல நோக்கந்தான். "ஆனால் நாடகக் கலைக்குப் புத்துயிரளிப்பதற்காக நடனக் கச்சேரிகளையும், சங்கீதக் கச்சேரிகளையும் எதற்காக நடத்தி மூடுமந்திரம் செய்ய வேண்டும்?" என்று ஒரு நண்பர் கேட்பது முற்றிலும் நியாயமாகவே தோன்றுகிறது. உண்மையில், நாடகக் கழக ஆர்ப்பாட்டத்திற்கு உதவியாயிருந்தவை, அவர்கள் நடத்திய நாடகங்களுக்குப் பதில் இந்த நடன, சங்கீதக் கச்சேரிகள்தாம். இதுபோன்ற கச்சேரிகளை சபாக்காரர்களும், தனி நபர்களும் அடிக்கடி நடத்தி வைக்கிறார்கள். அதே கச்சேரிகளை நாடகக் கழகத்தினரும் நடத்தி வைத்ததில் என்ன விசேஷம் இருக்கிறது? இது எந்த விதத்தில் நாடகக் கலைக்குப் புத்துயிரளிக்கிறது? அப்படியாவது, இந்தப் பிரமாத முயற்சிகள் மூலம் கழகத்திற்கு நிறைய நிதியாவது சேர்ந்ததா என்றால்; அதுவும் இல்லையாம். செலவெல்லாம் போக சொற்பத் தொகையே மிஞ்சியிருக்கிறதாம்!

உண்மைக் காரணம் என்ன ?

நாடகக் கலை இருந்த இடம் தெரியாமல் போயிருப்பது உண்மையே. நாடகங்களுக்குப் பொதுஜன ஆதரவு இல்லாமற் போயிருப்பதோ மறுக்க முடியாத உண்மையே. இந்த நிலைமையை ஏற்படுத்தியதற்குப் பொறுப்பாளிகள் நாடகக்காரர்களே.

ஸ்பெஷல் நாடகங்கள் நாடகக் கலையின் ஆணி வேரை அறுத்துவிட்டன. அவைகளிடமிருந்து ஒருவாறு தப்பியதாகத் தோன்றிய நாடகக் கலையை இப்பொழுது வேறொரு பூதம் பற்றிக்

கொண்டிருக்கிறது. 'சீர்திருத்தப் பிரசார நாடகங்கள்' என்ற பெயரில் சமீபகாலமாக நடந்து வரும் நாடகங்களையே குறிப்பிடுகிறேன். இவைகளில் அர்த்தமற்ற கதைகளும், நேர்மையற்ற கொள்கைகளும், விவேகமற்ற துவேஷப் பிரசாரங்களும், ஆதரவற்ற அரசியல் தத்துவங்களும், விரும்பத் தகாத "சமூக சீர்திருத்தங்"களுமே அடிப்படையாக உள்ளன. இவைகளை ஜனங்கள் காசு கொடுத்துப் பார்க்க வேண்டுமென்று நினைப்பது முட்டாள் தனமாகும். அவர்கள் வெறுப்பு மீறி, நாடகக் கலைக்கு எதிராய் பிரசாரம் செய்யாமல் இருக்கிறார்களே; அதுவே அதிர்ஷ்டவசம். நாடகக் கலை நசித்துப் போனதற்கு இன்னும் இதுபோன்ற காரணங்கள் பல உண்டு.

என்ன செய்யவேண்டும்?

நாடகக் கலைக்கு உண்மையிலேயே புத்துயிரளிக்க வேண்டுமானால், இக் கலைக்குப் பொதுஜன ஆதரவு குறைந்து போனதின் காரணத்தை கழகத்தினர் ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும். இக்கலை வளர்ச்சிக்கான சரியான திட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் வகுக்க வேண்டும். அவைகளை அங்கத்தினர்கள் அனுஷ்டிக்கும்படியும் செய்யவேண்டும். இதற்குப் பதிலாக கச்சேரிகளையோ, நாடகங்களையோ நடத்திக் கொண்டிருந்தால் நாடகக் கலை உருப்பட்டு விடாது. ஏன், சர்க்கார் பண உதவி அளித்தால்கூட பிரமாதமான பலன் ஏற்பட்டு விடாது. எனவே, கழகம் இனியாவது சரியான பாதையில் செல்லும் என்று எதிர்பார்க்கிறேன்.

தமாஷா வரி கூடாது

கழகத்தின் கடைசி நாடகத்தன்று "நாடகங்களுக்கு தமாஷா வரி விதிக்கப்படுவது ரத்து செய்யப்பட வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேறியது. நான் இதை ஆதரிக்கிறேன். இப்பொழுது நாடகங்கள் நடத்தப்படுவதே குறைந்து விட்டது. இவை மூலம் சர்க்காருக்குக் கிடைத்துவரும் சொற்ப தமாஷா வரி வருமானமும் குறைந்தேதான் போயிருக்கும். எனவே, நாடகங்களுக்கு தமாஷா வரியை நீக்குவதால் சர்க்காரின் வருமானம் மிக பாதிக்கப்பட்டு விடாது. ஆனால் நாடகக் கலைக்கோ இது ஒரு பெரிய சௌகரியமாய் இருக்கும் என்பது நிச்சயம்.

கைவிடுவார்களா?

நாடகக் கலை முன்னேற வேண்டுமானால், ஒவ்வொரு நகரத்திலும் நாடகங்கள் நடத்தக்கூடிய கொட்டகைகள் அமைக்கப்பட வேண்டும். சங்கீத, நடனக் கச்சேரிகள், நாடகங்கள் இவைகளை நடத்துவதற்கான கொட்டகைகள் தென்னாட்டில் மிக மிகக் குறைவாய் உள்ளன. அதுவும் சென்னையில் இவ்வித நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான இடவசதி அதிகமில்லாமல் தவிக்க வேண்டியிருக்கிறது. சென்னையில் புதிதாக குறைந்தது இரண்டு பெரிய நாடக தியேட்டர்களாவது அத்தியாவசியமாயிருக்கிறது. நிலைமை இப்படியிருக்கும்போது, சென்னையிலுள்ள மியூஸியம் தியேட்டரை சர்க்கார் வேறு உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ள விரும்பும் செய்தி என்னை திடுக்கிடச் செய்கிறது. சென்னையிலுள்ள கச்சிதமான - அழகான - தியேட்டர் மியூஸியம் தியேட்டர்தான், இந்தத் தியேட்டர் கலை நிகழ்ச்சிகளுக்கு மிகவும் பயன்பட்டு வருகிறது. எனவே, சர்க்கார் இந்தத் தியேட்டரைத் தங்கள் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளும் யோசனையைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காந்திஜி
ஸ்தூபி நிதிக்கு

உங்கள் காணிக்கையை
அனுப்பிவிட்டீர்களா ?

10

எம். எஸ்
சுந்தரி பாய்
வாழ்க்கை வர்ணனை

மேல் நாட்டிலும் சரி, வட நாட்டிலும் சரி, பல திரைப்படக் காதலர்கள் பல படங்களில் ஜோடியாகவே நடித்துப் பிரபலம் அடைந்திருக்கின்றனர். ஆனால் தமிழ் நாட்டிலோ இதுபோல் திரைப்படக் காதலர்கள் ஜோடி சேர்ந்தது விசேஷமாக இல்லை. அதற்குப் பதில் ஹாஸ்ய நடிக நடிகைகள் தமிழ்ப் படங்களில் ஜோடி சேர்ந்துள்ளதற்கு இணை வேறு எங்குமே காண முடியாது. நீங்களே பாருங்கள்: என். எஸ். கிருஷ்ணன் — மதுரம்; காளி என். ரத்தினம் — ஸி. டி. ராஜகாந்தம்; சாரங்கபாணி — செல்லம்; சுப்பு — சுந்தரி பாய். இந்த ஜோடிகளைப் பார்க்கும்போது "அடடா! என்ன பொருத்தம்!" என்று நீங்கள் வாய்விட்டுச் சொல்கிறீர்களல்லவா?

சுப்புவும் — சுந்தரி பாயும் ஜோடி சேருவதற்கு முன்பே சில படங்களில் தனித்தனியாக நடித்திருக்கின்றனர். ஆனால் அப்பொழுதெல்லாம் அவர்களது நடிப்பில் ஜோடி சேர்ந்தபின் காணப்பட்ட 'ஜோர்' காணப்படவில்லை. மதன காமராஜனில் இவர்கள் இருவரும் ஜோடி சேர்ந்ததும் அவர்களது நடிப்பு 'பளிச்'சென்று ரஸிகர்களின் கவனத்தைக் கவர ஆரம்பித்தது. பைத்தியக்காரப் பெண்ணாக நடித்த சுந்தரி பாயையும், கூட நடித்த சுப்புவையும் எல்லோரும் பாராட்டத் தொடங்கினர். அதன் விளைவாக பக்த நாரதரிலும் ஜோடியாகவே நடிக்கும் சந்தர்ப்பம் இவர்களுக்குக் கிடைத்தது. மூன்றும் முறையாக இவர்கள் ஜோடியாக தாஸி அபரஞ்சி படத்தின் ஹாஸ்ய பாகத்தில் தோன்றியதோ மறக்க முடியாதபடி அபாரமாய் அமைந்து விட்டது. ஆனால் இவர்களுக்கு அதன் பிறகு ஜோடியாக நடிக்கும் சந்தர்ப்பம் ஏனோ வாய்க்கவில்லை.

சுந்தரிபாய் மதன காமராஜன் மூலம் தான் சினிமா ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்தார் என்றாலும், அவர் அதற்கு முன்பே மூன்று படங்களில் நடித்திருக்கிறார் என்பதைஅநேகர் கவனித்திருக்கமாட்டார்கள். ஆனால் அவரது நடிப்பு அப்படங்களில் விசேஷமாக அமையாததால், அவர் யார் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ரஸிகர்களுக்கு ஏற்படாததில் ஆச்சரியமில்லை.

சுந்தரி பாய் சினிமா உலகில் பிரவேசித்தது ஒரு ரஸமான சம்பவம் ஆகும். அவர் மதுரையில் கெபரன் ஹால் ஹைஸ்கூலில் இரண்டாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்த போது, அவர் மனதில், 'படித்துப் பயிற்சி பெற்று ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயினியாகவோ, அல்லது ஒரு நர்ஸாகவோ ஆக வேண்டும்' என்ற எண்ணத்திற்குப் பதில், 'சினிமாவில் நடித்து ஒரு நக்ஷத்திரம் ஆக வேண்டும்' என்ற எண்ணங்கள் தோன்றியிருக்கும் என்று துளிக்கூட நினைப்பதற்கில்லை. அவர் சினிமாப் படங்களில் நடிக்க முற்பட்டபோது கூட தாம் நிரந்தரமாக ஒரு புதிய பாதையில் செல்லுவதாகவோ, எதிர் காலத்தில் சினிமாவே தமது தொழிலாக ஸ்திரப்பட்டு விடும் என்றோ சுந்தரி பாய் நினைக்கவில்லை.

சுந்தரி பாய்க்கு அந்தக் காலத்தில் சினிமாவைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால், அவர் பள்ளிக்கூட நாடகங்களில் அடிக்கடி நடித்து வந்ததனால், சினிமாப் படங்களில் நடிக நடிகைகளின் நல்ல நடிப்பைப் பார்க்கும் போது, 'அவர்களைப் போலத் நாமும் நடிக்க வேண்டும்' என்ற ஆசை அவருக்கு ஏற்படுமாம். ஆனால் அடுத்த நிமிஷமே, "அடேயப்பா, அந்த மாபெரும் பாக்யம் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு எங்கே கிடைக்கப் போகிறது?" என்று பெருமூச்சுடன் தமக்குத் தாமே கேட்டுக்கொண்டு, தம் ஆசையை அடக்கிக் கொள்ளுவது வழக்கமாம்.

இப்படியாக, அவர் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த காலத்தில், திடீரென்று ஒரு நாள் அவரிடம், "என்ன சுந்தரி! நீ சினிமாவில் நடிக்க ஆசைப்படுகிறாயா?" என்று ஒருவர் கேட்டிருந்தால் அவர் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். உண்மையில் இதே போல் ஒருவர் கேட்கவே செய்தார். அதன் விளைவாகத்தான் சுந்தரி பாய் இன்று ஒரு சினிமா நடிகையாக விளங்குகிறார்.

"காபி ஆஸ்பிரின்" கம்பெனியைச் சேர்ந்தவரும், சுந்தரி குடும்பத்திற்கு நண்பருமான ஒரு கனவான் தான் இப்படிக் கேட்டவர். இதைக் கேட்டதும், "ஏதோ, தன் அந்தரங்க

சந்திரலேகா

ஆசையைத் தெரிந்துகொண்டு, அந்த கனவான் தமாஷ் செய்கிறார்,' என்றே சுந்தரி நினைத்தார். ஆனால்' அவர் கேட்டது 'தமாஷிற்கல்ல, நிஜமாகத்தான்' என்பதை பின்னர், தெரிந்து கொண்டதும் சுந்தரி பாய் அடைந்த ஆனந்தத்திற்குச் சொல்லவும் வேண்டுமா?

ஆனால் அவரது ஆனந்தப் பிரவாகத்தை அவருடைய தாயார் அணை போட்டு நிறுத்தினார். தம் பெண் சினிமாவில் நடிப்பதை தாயார் விரும்பவில்லை. ஆனால் அந்த கனவான் சமாதானம் கூறினார்: "நாங்கள் தயாரிக்கப் போவது காபி ஆஸ்பிரீன் தலைவலி மாத்திரைகளுக்கான ஒரு தமாஷ் விளம்பரப் படம். இதில் உங்கள் பெண் நடிப்பதால் கெடுதல் ஒன்றும் இல்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று அவர் தைரியம் சொன்னார். அவரது பேச்சுக்கு தாயாரால் மறுப்புச் சொல்ல முடியாததால் சம்மதிக்க வேண்டியதாயிற்று. இந்தப் படத்தில் நடிப்பதற்காக சுந்தரி பாய் குடும்பத்தினர் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சில மாதங்களுக்குப் பிறகு காபி ஆஸ்பிரீன் விளம்பர (துண்டுப்) படம் பல ஊர்த் தியேட்டர்களில் காட்டப்பட்டது. அப்படத்தில் "தலைவலியைப்

சந்திரலேகா

போக்குவதற்கு சிறந்தது காபி ஆஸ்பிரினே'' என்று தலைவலி உண்டாகும்படி பிரசாரம் செய்த சிறு பெண் சுந்தரி பாய்தான்!

சுந்தரி பாய் குடும்பத்தினர் பம்பாய்க்குச் சென்ற சமயத்தில் அங்கே உள்ள ஸ்டுடியோ வொன்றில் தான சூர கர்ணு (தமிழ்ப்) படம் தயாராகிக் கொண்டிருந்தது. அப்படத்தின் முதலாளிகள் சுந்தரி பாயிடம் தம் படத்திலும் நடிக்கும் படிக் கேட்டனர். ''பம்பாய்க்கு வந்தது தான் வந்தோம்; இந்தப் படத்திலும் தான் நடிக்கட்டுமே'' என்ற எண்ணத்துடன் சுந்தரி பாயின் தாயார் ஒப்புக்கொண்டார்.

அதே சமயத்திலே தான் பம்பாயில் சுகுண சரஸா படமும் தயாராகி வந்தது. அப்படத்தின் முதலாளிகள் சுந்தரி பாய் தான சூர கர்ணு படத்தில் நடித்து வருவதை அறிந்து, அவரை மட்டுமன்றி, அவரது தங்கை சரஸாவையும் தம் படத்தில் நடிக்கச் செய்து விட்டனர். தங்கை சரஸா சரஸாவின் (எம். எஸ். விஜயாளின்) தங்கையாக அப் படத்தில் நடித்திருக்கிறார்.

தொழிலுக்குப் புதியவராய் இருந்ததனாலோ, அல்லது சரியான கவனிப்பு இல்லாததாலோ, சுந்தரி பாயின் நடிப்பு ரஸிகர்களின் கவனத்தைக் கவரவில்லை. சுந்தரி பாய்க்கே தம் நடிப்பு பிடிக்கவில்லை என்றால் கேட்பானேன். இவ்விரு தோல்விகளும் அவரது மனதில் ஒரு உறுதியை ஏற்படுத்தின. 'எப்படியாவது, ஒரு படத்திலாவது வெற்றிகரமாய் நடிக்காமல் விடுவதில்லை' என்று அவர் தீர்மா

ளித்துக் கொண்டார். இந்தத தீர்மானத்துடன் சென்னைக்குத் திரும்பிய அவருக்கு **சூர்ய புத்ரி** இடமளித்தது. ஆனால், இப்படத்திலும் அவரது உழைப்பு வீணாகவே முடிந்தது. சுந்தரி பாய் மனம் உடைந்து போனார். அச்சமயத்தில், ஜெமினியின் **மதன காமராஜன்** படத்தில் ஒரு சிறிய ஹாஸ்ய பாகத்தில் தோன்றுவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. 'சுந்தரி பாய் மற்ற வேஷங்களுக்குப் பதில் ஹாஸ்ய வேஷங்களிலே தான்



நன்கு சோபிக்கக் கூடும்' என்பதை இப் படத்தில் அவரது நடிப்பு எடுத்துக் காட்டியது. பிறகு சுந்தரி பாய் நடித்த **பக்த நாரதர், நந்தனார்** ஆகிய படங்கள் இந்த உண்மையை ஊர்ஜிதம் செய்தன.

சுந்தரி பாய்க்கு முதன் முதலில் அபரிமிதமான புகழைச் சம்பாதித்துக் கொடுத்த படம் **தாஸி அபரஞ்சி** ஆகும். அந்த அபரஞ்சி தன்னைப் பற்றிப் பேசுபவர்கள், நினைப்பவர்கள்—ஏன் கனவு காண்பவர்களிடம் கூட!—ஆயிர மாயிரமாய் பொன்னைப் பறித்து வருகிறாள். அந்தக் குருக்களுக்குக் கூட அபரஞ்சியின் மேல் தான் ஆசை. அபரஞ்சியின்

வேலைக்காரி சிங்காரியை ‘பத்தினி போல் வச்சுக்க ஒரு பாவி மவனும்’ முன் வரக் கூடாதா? பாவம், அவள் ‘எத்தனை நாளைக்கு இப்படியாக இடுப்பொடிய வேணுமோ’? சேச்சே! ‘தாஸி வீட்டு வேலைக்கார கேலிப் பிழைப்பு வெளியே சொன்னால் வெட்கம்’தான்! இதை யெல்லாம் அந்த சிங்காரி (சுந்தரி) சொல்லி அழுவதற்குப் பதில், படத்தில் கணீரென்று இரண்டு பாட்டாகப் பாடியிருக்கிறார்.

அபரஞ்சியில் சுந்தரி பாய்க்கு வேலைக்காரி வேஷம் நூற்றுக்கு நூறு பொருந்தியிருந்தது. அவர் ‘வெடுக், வெடுக்’ கென்று பேசியதும், பொருட் சுவை பொருந்திய பாட்டுகளை கணீரென்று பாடியதும், தம் பாகத்தை நன்குணர்ந்து நடித்ததும், பட ரஸிகர்களின் மனதைக் கவர்ந்து விட்டன. அவர் பாடிய “வேலைக்கார கேலிப் பிழைப்பு” என்ற இசைத் தட்டு எங்கு திரும்பினாலும் ஒலிக்கத் தொடங்கியது. அபரஞ்சி மூலம் சுந்தரிபாய் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகை என்பது தீர்மானம் ஆகிவிட்டது.

அடுத்தபடியாக சுந்தரி பாய் நடித்த படம் **கண்ணம்மா என் காதலி** ஆகும். இது ஒரு நல்ல ஹாஸ்யப் படம். இதில் சுந்தரிபாய்க்கு கதாநாயகியாகவே நடிக்கும் பாக்யம் கிடைத்தது. இப்படத்திலும் கூடிய வரையில் நடித்து தம் பெயரைக் காப்பாற்றிக் கொண்டார் சுந்தரி பாய்.

கண்ணம்மாவுக்குப் பிறகு சுந்தரி பாய்: **மிஸ் மாலினி**யில் நடித்திருக்கிறார். இப்படத்திலும் அவரது நடிப்பு பாராட்டக் கூடியபடியே அமைந்திருந்தது. “பட்டண வாசம் பணத்துக்கு நாசம்” என்பதை அவர் தெரிந்துகொண்டு, பாடியதைக் கேட்டு நாம் எவ்வளவு சந்தோஷம் அடைந்தோம்.

கடைசியாக, சுந்தரி பாய் நடித்

கண்ணம்மா
என் காதலி

துள்ள படம் சந்திரலேகா. இப்படத்தில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பாத்திரமே நூதனமானது. நடிப்போடுகூட அவர் நாட்டியமும் ஆடியிருக்கிறார். மனியாகப் பேசி, மோஹவலை வீசிய அந்த நாடோடிப் பெண்ணையோ, விடா நகைப்பை உண்டுபண்ணிய அந்த 'நாட்டியக் குதிரை' நடனத்தையோ நாம் மறக்க முடியுமா? சந்திரலேகாவிலும் சுந்தரி பாயின் நடிப்பு ரஸிகர்களின் மனதைக் கவருவதாய் இருந்தது.

சுந்தரி பாய் ஜெமினி படங்கள் மட்டிலுமே நடித்து வருவதிலிருந்து, அவர் ஜெமினியில் நிரந்தர சம்பளத்தில் அமர்ந்திருக்கிறார் என்பதை நீங்களே தெரிந்து கொண்டிருக்க முடியும். இனி வரும் ஜெமினி படங்களிலும் அவரைக் காணலாம்.

''கோவில் குருக்களுடன் நானே—கொண்டாட்டமாய் இருக்கப் போறேனே'' என்று அபரஞ்சி படத்தில் தீர்மானமாகப் பாடினரல்லவா சுந்தரி பாய். தம் தீர்மானத்தை அசல் வாழ்க்கையிலோ நிறைவேற்றியே காட்டி விட்டார்! அபரஞ்சியின் வேலைக்காரி—சிங்காரியைக் கண்டு பயந்து அவ்வளவு ஓட்டமெடுத்த அந்தக் குருக்கள் (கொத்தமங்கலம் சுப்பு) இப்பொழுது (சுந்தரி பாயைக் கண்டு) ஓட்டம் எடுப்பதேயில்லை! இருவரும் தான் ஒன்ருய் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார்களே! இவர்களுக்கு சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஒரு குழந்தை பிறந்தது. ஆனல் அது இரண்டரை மாதங்களுக்குப் பிறகு இறந்து விட்டது.

சுந்தரியின் மூத்த சகோதரிகள் மூவரும் குடும்ப வாழ்க்கையில், குழந்தை குட்டிகளுடன் சுகமாக வாழ்ந்து வருகின்றனர். அவரது தங்கை சரஸா நாட்டியம் பயின்று, சிறிது காலம் ஜெமினியில் ஊழியம் செய்து வந்தார். பிறகு ஜெமினி ஊழியர்களில் ஒருவரும், ஜெமினியின் ஹிந்திப் படத் தயாரிப்பிற்கு உதவி வருபவருமான கிருஷ்ண தாஸ் முகர்ஜி என்பவரை மணந்துகொண்டு, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு விட்டார். (ஸ்ரீ. முகர்ஜிதான் சந்திரலேகா, நிஷான் ஆகிய ஹிந்திப் படங்களில் ரஞ்சனுக்கு குரல் தானம் செய்திருக்கிறார் என்று கேள்வி) சுந்தரி பாய்க்கு சகோதரிகள் தவிர ஒரு சகோதரனும் இருக்கிறார்.

சுந்தரி பாயின் சொந்த ஊர் மதுரை; மஹாராஷ்டிர குடும்பத்தில் 1923 மார்ச் 2-ந் தேதியன்று பிறந்தவர். அவரது தகப்பனரான ஸ்ரீ. ராமராவ் தென்னிந்திய ரயில்வேயில் கார்டு உத்தியோகம் பார்த்து வந்தார். அவர் பல வருஷங்களுக்கு முன்பே இறந்து விட்டதால் குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பு சுந்தரியின் தாயாரான எம். எஸ். நாகமணி பாய்க்கு ஏற்பட்டது. அவர் 'நர்ஸ்' வேலையைப் பழகி, தஞ்சை மதுரை ஆகிய நகரங்களில் உத்தியோகம் பார்த்து, தம் குழந்தைகளை

[தொடர்ச்சி 58-ம் பக்கத்தில்]

பிலிம் பக்கடா

"ராமாயண கதா காலக்ஷேபத்துக்கு பிரபல சினிமா நடிகை வந்திருந்தார்."

—செய்தி

கதா காலக்ஷேபங்களுக்கு கூட்டம் சேர்ப்பதற்கு, சுண்டல் கொடுப்பதை விட இது நல்ல உபாயம்தான்!

* * *

"இறுதியில்.........பாகவதர் பாடக் கூட்டம் கலைந்தது."

—பத்திரிகைச் செய்தி

"கூட்டத்தைக்கலைப்பதற்கு குண்டாந் தடிக்குப் பதில் இந்த பாகவதரின் பாட்டைப் பயன் படுத்திக் கொள்ள லாமே" என்று ஒரு 'அடிபட்ட' அரசியல் வாதி கூறுகிறார்!

* * *

".........நடிகை கோர்ட்டுக்கு வராமையினால் வழக்கு ஒத்திப் போடப்பட்டது."

—ஒரு செய்தி

அந்த நடிகை ஆஜராகாததற்குக் காரணம், (கோர்ட்டார்) மோட்டார் அனுப்பாததாய் இருக்குமோ என்று ஒரு பட முதலாளி சந்தேகிக்கிறார்!

* * *

".........நடிகர் சுயமரியாதைக் கட்சியைச் சேர்ந்தவரா?"

—ஒரு ரஸிகரின் கேள்வி

அவர் பிறரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளுவதால் இப்படி சந்தேகிக்கிறீரோ!

* * *

"கட்டட நிதிக்காக நடைபெற்ற நாடகத்தில், மேடைமீது ஏராளமான கற்கள் வீசப்பட்டன." —தினசரிச் செய்தி

கச்சேரியின் நோக்கத்தை ரஸிகர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறதல்லவா!

* * *

"படங்களை 'டப்' செய்யும் புதிய முறை ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது."

—லண்டன் செய்தி

"டப்பாக்களில் தூங்கும் தம் படங்களுக்கு இந்த முறையினாலாவது விமோசனம் ஏற்படாதா?" என்று ஏங்குகிறார்கள் சில பட முதலாளிகள்.

* * *

"வருமானத்திற்காக கார்ப்பொரேஷன் நாடகமன்றங்களை ஏற்று நடத்தலாம்."

—ஒரு கவுன்ஸிலரின் யோசனை

"நாடகத்தை நடத்திப் பார்த்தால் தான், வரு(ம்)மானமா அல்லது, 'போகு(ம்)மானமா' என்பது தெரியும்" என்கிறார் ஒரு மாஜி நாடகக் கம்பெனி முதலாளி.

* * *

"வெள்ளி மயிர் 'பேஷன்' ஆகிறது."

—செய்தித் தலைப்பு

இனி நம் நக்ஷத்திரங்களில் சிலர் தம் நரைத்த தலைகளைக் கருப்பாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சிகளைக் கைவிட்டு விடுவார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

* * *

"மந்திரிகள் சினிமாப்படம் பார்ப்பது தவறா?"

—செய்தித் தலைப்பு.

பார்ப்பது தவறல்ல; ஆனால் அவர்கள் அதைப் பற்றிப் பேசுவதுதான் (அநேகமாக) தவறாக இருக்கிறது!

மிஸ். புஷ்பமாலதி

ராதாமணி

தன்னைப்பற்றிப் பிறர் புகழ்ந்து பேசுவதைக் கேட்டு மகிழாதவர்கள்கூட இந்த உலகில் இருக்க முடியுமா? முடியவே முடியாது. அப்படி ஒருவர் இருந்தால் அவர் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டவராகத் தான் இருத்தல் வேண்டும். அதிலும் என் போன்ற பெண் ஜன்மங்களுக்கு இதைவிட வேறு பேரின்பம் உண்டா என்ன? ''புஷ்பமாலதி பெயருக்கு ஏற்றபடி சிறந்த அழகி''—என்று மற்றவர்கள் சொல்லும் போது நான் புளகாங்கிதம் அடைவேன்; புஷ்பம் போன்ற, என் பொன்னிற மேனியை நான் பார்த்துக் கொள்வேன்; என் கண்களில் அப்பொழுது பெருமையின் ஒளி 'டால்' வீசும்.

ஆம்; மற்றவர்களெல்லாம் புகழ்வது போல நான் உண்மையில் ஒரு சிறந்த அழகிதான். இயற்கையிலேயே எனக்கு அமையாது விட்டுப் போன ஒன்றிரண்டு லக்ஷணங்களையும் நான் செயற்கை அலங்காரப் பொருள்களால் பூர்த்தி செய்து கொண்டு பிரகாசித்தேன். ஐந்து ஆண்டுகளாக நவநாகரிக மாணவர்கள், மாணவிகள் குழாமில் பழகி, காலேஜில் படித்து வரும் எனக்குப் பிறர் மெச்சும் படி காட்சியளிக்கத் தெரியா விட்டால் மற்றவர்கள் என்னைப் பார்த்து நகைக்க மாட்டார்களா? 'காலேஜ் படிப்புப் படித்தும் பயனில்லை' என்று கிண்டலாகப் பாடமாட்டார்களா? அதற்கெல்லாம் நான் இடம் கொடுப்பேனா என்ன!

நெளி நெளியாக அடர்ந்து வளர்ந்து சுருண்ட கூந்தல், மையினால் தீட்டி விடப்பட்ட புருவங்கள், காமன் கைவில்லைப் போன்ற செவ்விதழ்கள், இவ்வளவுடன் மினுக்கும் என்னைக் கண்டு முற்றும் துறந்த முனிவர்களும் சபலம் கொள்வர். அப்படியிருக்க கட்டிளங்காளைகளான என் கூடப் படிக்கும் வாலிபர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும். என்னுடன் படிக்கும் சக மாணவிகளெல்லாம் என்னை 'பேஷன் குவின்' (நாகரிக ராணி) என்று அழைப்பது வழக்கம். அவர்கள் என்னை அப்படி அழைத்ததற்குக் காரணம் உண்டு. அவர்களுக்கெல்லாம் புதுப்புது 'பாஷ'ன்களுக்கு நான்தான் வழிகாட்டி வந்தேன். ஒரு நாள் நான் நூதனமாக சிங்காரித்துக் கொண்டு வரவேண்டியதுதான்; மறுநாள் அதே சிங்காரத்துடன் மற்ற மாணவிகள் அனைவரும் காட்சி அளிப்பார்கள். மாணவர்களோ என்றால், ஆளை அப்படியே விழுங்கி விடுவது போல, என்னை வைத்த கண் வாங்காது பார்ப்பார்கள். ஆனால் நானோ அவர்களில் யாரையும் தலை நிமிர்ந்து கூடப் பார்த்ததில்லை. என் இந்தச் செய்கையைக் கொண்டு, எனக்கு ஆண் வர்க்கத்திடமே வெறுப்பு ஏற்பட்டு விட்டதாக முடிவு கட்டிவிட வேண்டாம். மிகவும் படித்த சில பெண்களைப் போல், 'கல்யாணமே வேண்டாம்' என்று கூறும் கட்சியைச் சேர்ந்தவளுமல்ல நான். ஆனால் என் மனத்திலே எனக்கு வரவேண்டிய கணவன் எப்படியெப்படி இருக்க வேண்டும் என்று நான் உருவகப் படுத்தி வைத்திருந்தேன். அந்த 'இலக்ஷிய புருஷன்' என் கூடப் படித்த மாணவர்கள் கூட்டத்தில் இல்லை; ஏன் அந்த வட்டாரத்திலேயே இல்லை. என்னுடைய 'இலக்ஷிய புருஷன்' சினிமா வானிலே பிரகாசிக்கும் ஒரு நக்ஷத்திரம்! ஆனால் அந்த 'இலக்ஷிய புருஷன்' எந்த நக்ஷத்திரம் என்பதைத்தான் என்னால் நிச்சயிக்க முடியாமலிருந்தது.

எனக்கு சினிமா என்றால் அலாதிப் பைத்தியம். என்னைப் பணச் செலவு செய்து படிக்க வைத்து வந்த என் சித்தப்பாவோ மிகவும் கருர் பேர்வழி; கருமிப்பேர்வழி என்றுதான் வைத்துக்கொள்ளுங்களேன். என் செலவுகளுக்கு அவர் கணக்காகத் தான் பணம் அனுப்பி வந்தார். சினிமா, நாடகங்களுக்குப் போக எனக்கு அவர் பணம் அனுப்புவதே கிடையாது. அதற்காக என்னால் சினிமாப் பார்க்காமல் இருந்துவிட முடியுமா? திரையிடப்பெறும் ஒரு படம் விடாமல் எல்லாப் படங்களையும் நான் பார்த்து வந்தேன். என் சித்தப்பா புஸ்தகங்களுக்கென்றும், நோட்டுப் புஸ்தகங்களுக்கென்றும் அனுப்பி வந்த பணம் எனக்கு படம் பார்க்க உபயோகப் படாவிட்டால் அந்தப்பணத்திற்குத்தான் ஏது

பெருமை? தவிர அநேகமாக என்னுடைய பணக்கார சிநேகிதிகள் சிலரும், என்னுடைய நட்பை சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்ற போட்டியில் என்னை சினிமாவுக்கு அழைத்துப் போவதற்கு ஒருவரை ஒருவர் முந்திக் கொள்வார்கள். இப்படி வானம்பாடி போலக் காலம் கடத்தி வந்த என் குதூகல வாழ்க்கை அதிக காலம் நீடிக்கவில்லை.

என்னைக் 'குடியும் குடித்தனமுமாய் பார்க்க வேண்டும்' என்ற எண்ணமோ; அல்லது தமக்குச் சுமையாக இருக்கும் என்னை எவன் தலையிலாவது கட்டிவிட்டுத் தன் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட நினைத்தோ தெரியவில்லை; என்னுடைய கல்யாணத்தை நடத்திவிடத் தீர்மானித்து அதற்கான முயற்சியில் மும்மரமாக ஈடுபட்டு வந்தார் என் சித்தப்பா. எனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்துவிட்டதாகவும், எனக்கு வரப்போகும் கணவன் யார் என்பது பற்றியும் அவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். என் சித்தப்பா எனக்குத் தேர்ந்தெடுத்த கணவன் யாரென்பதைத் தெரிந்து கொண்டால், நீங்கள் கூட எனக்காக அனுதாபப்படுவீர்கள் என்பது நிச்சயம். நான் அதற்கு முன் பார்த்தும், கேட்டுமிராத பத்தாம் பசலியான, தமது மருமான் யாரோ ஒருவனுடன் என் வாழ்க்கையைப் பிணைக்கத் தீர்மானித்தார் அவர். எனக்கு எப்படியிருக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள். இருபதாம் நூற்றூண்டிலேயுமா இந்த அக்கிரமம்? ஏற்கெனவே என் இலக்ஷிய

"எட்ரம்"

வீரிய விருத்திக்கும்
இழந்த பலத்தை
திரும்பப் பெறுவ
தற்கும் சிறந்த

ஹோமியோபதி
கூட்டு ஔஷதம்

இதை ஆண், பெண்
யாவரும், எவ் வயதின
ரும் உபயோகிக்கலாம்

50 மாத்திரைகள்
கொண்ட புட்டி
விலை ரூபாய் 4.



இந்தியன் ஹோமியோபதி
இன்ஸ்டிடியூட்,
கும்பகோணம்.

புருஷனை உருவகப் படுத்தி வைத்துக் கொண்டிருக்கும் எனக்கும், முகமறியாத ஒருவனுக்கும் மணமாம்! கொதித்தது என் உள்ளம்.

அதுதான், வாழ்க்கையின் லக்ஷியம் இன்னது என்பதை நான் உணர ஆரம்பித்திருந்த பருவம். ஆகவே என் மனதிற்குப் பிடித்தமில்லாத அந்த மணச் செய்தி எனக்கு வேப்பங்காயாக இருந்தது. சூட்டோடு சூடாக நான் என சித்தப்பாவுககு ஒரு கடிதம் எழுதிப் போட்டேன். கடிதத்தில் என் உள்ளத்தைத் திறந்து கொட்டியிருந்தேன். என் மனதுக்கு அவர் கூறிய மணவாளன் பிடிக்கவில்லையென்றும், என் அபிப்பிராயத்தை மீறி அவர் ஏற்பாடு செய்தால் தற்கொலை செய்து கொண்டு விடுவேன் என்றும் 'இறுதி எச்சரிக்கை' கொடுத்திருந்தேன். என் சித்தப்பா எழுதிய பதில் கடிதத்தில், என்னை ஒரு அத்தியாயம் திட்டிவிட்டு, நான் ஆற அமர யோசிப்பதற்காகச் சிறிது காலம் அவகாசம் அளித்திருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இது இப்படியிருக்க, என் சினிமாப் பைத்தியத்தின் அளவை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? நான் ஒரு சினிமாப் பத்திரிகை விடாமல் வாங்குவேன். அவைகளில் வெளியாகும் படங்களையெல்லாம் கத்தரித்து என் அறையை அலங்கரிப்பேன். அது மட்டுமா? பிரபல நக்ஷத்திரங்களுடனெல்லாம் நான் கடிதம் மூலம் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தேன். அவர்களுடைய கையெழுத்துடன் கூடிய அவர்களுடைய போட்டோக்களை என் உயிரெனக் காப்பாற்றி வந்தேன். என்னுடன் படித்த மாணவர்களும், மாணவிகளும் படிப்பில் வேண்டுமானால் என்னைவிடத் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரு விஷயத்தில் அவர்களில் யாருமே என்னுடன் போட்டி போட முடியாது! எந்தெந்த நக்ஷத்திரம் என்னென்ன 'ஸ்டைலில்' உடை உடுத்திக் கொள்கிறார்கள்; அவர்களுடைய குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை; இவைகளெல்லாம் எனக்குத் தண்ணி பட்டபாடு. இன்னும் கேளுங்கள். அவர்களுடைய 'அந்தரங்க வாழ்க்கை வர்ணனை' பூராவும் எனக்குத் தெரியும். எனக்குத் தெரிந்த அளவு அவர்களுக்கே தெரியுமா என்பதுகூட சந்தேகம்தான்! ஒவ்வொருவருக்கும் எவ்வளவு முறை கல்யாணம் ஆகியிருக்கிறது; யார் யார், யாருடன், எப்பொழுது, எங்கே போனார்கள்; அவர்களுக்கு பாதம் ஹல்வா பிடிக்குமா அல்லது சுண்டைக்காய் வற்றல் குழம்புதான் பிடிக்குமா— இம்மாதிரி அக்கப்போர் விஷயங்கள்

[தொடர்ச்சி 48-ம் பக்கத்தில்]

பரம்பரைப் பணக்காரனுக்கும், புதுப் பணக்காரனுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் உண்டு. முன்னவனுடைய போக்கு பெருந்தன்மை மிகுந்ததாக இருக்கும். பின்னவனது செய்கை ஒவ்வொன்றிலும் அற்பத்தனம் தலை தூக்கி நிற்பதைக் காணலாம். இதே மாதிரித்தான், தன்னுடைய முயற்சியினாலும், திறமையினாலும் முன்னுக்கு வந்த நக்ஷத்திரத்திற்கும், அதிருஷ்டவசத்தினால் திடீரென்று நக்ஷத்திரமாகி விடுகிறவர்களுக்கும் உள்ள தாரதம்யம் நன்கு வெளிப்படுகிறது. சென்ற சில மாதங்களாக ஒரு நக்ஷத்திர நடிகை போகிற போக்கு இதை ஊர்ஜிதம் செய்கிறது.

* * *

சிறு வயதிலிருந்தே படங்களில் நடித்து வந்திருக்கிறார் இந்த நடிகை. திடீரென்று ஒரு படத்தின் மூலம் நக்ஷத்திரப் பதவிக்கு உயர்ந்து விட்டார். சினிமா உலகில் அவருக்கு கிராக்கி ஏற்பட ஆரம்பித்தது. புகழுடன்கூட "தான்" என்ற அகம்பாவமும் அவர் உடம்பில் ஊற ஆரம்பித்தது. 'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்ற ரீதியில் நடக்க ஆரம்பித்தார் அவர். தன் தாய்க்கும், அவளது சகோதரனுக்கும் மனவருத்தம் ஏற்படும்படி நடந்துகொள்ள ஆரம்பித்தார். அவர்கள் எவ்வளவோ தடுத்தும், எச்சரிக்கை செய்தும் அதை லக்ஷியம் செய்யாமல் சொந்தத்தில் ஒரு படத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்தார்.

* * *

நக்ஷத்திர நடிகர் ஒருவர் தயாரித்துவரும் படத்தில் கலகலப்பு ஏற்பட்டது. இழைந்து குழைந்து கொண்டிருந்த பிரதம நடிகைக்கும் அந்த நடிகருக்கும் கசப்பு ஏற்பட்டது. அவ்வளவுதான்! நான் மேலே குறிப்பிட்ட 'திடீர்' நக்ஷத்திரத்திற்கு அடித்தது யோகம்; நடிகரின் படத்தில் பிரதம நடிகையாகி விட்டார். அதுமட்டுமா? நடிகரின் அபிமானத்தையும் அளவுக்கு மீறிப் பெற்றுவிட்டார். நக்ஷத்திரத்தின் இந்த விபரீதப் போக்கு அவருடைய தாயாருக்கும் மாமனுக்கும் கோபத்தை மூட்டிற்று. கோபம் தாளாது மாமன் நடிகைக்கு 'பூசை' போட்டாராம். நக்ஷத்திரம் நடிகரின் வீட்டில் தஞ்சம் புகுந்து கொண்டு, அவர் வீடே கதி என்றாகி விட்டாள்! நக்ஷத்திரம் அங்கிருப்பதை விரும்பாத நடிகரின் சொந்த மனைவி உண்ணாவிரதம் கூட அனுஷ்டித்தாராம்! நக்ஷத்திரத்தின் தாயார் தன் மகளை அழைக்க நடிகரின் வீட்டிற்கு நடையாக நடந்தாராம்.

* * *

இந்த 'திடீர் நக்ஷத்திரம்' நடித்துக் கொண்டிருந்த ஒரு சமூகப் படத்தின் 'ஷூட்டிங்' தினம். எல்லோரும் தயாராகிவிட்டனர். மேக்–அப் பண்ணிக் கொண்டு தயாராக இருந்த 'திடீர் நக்ஷத்திரம்' திடீரென்று ஸ்டுடியோவில் காணப்படவில்லை! சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரே கோபம். நக்ஷத்திரம் தன் காரில் ஏறிக்கொண்டு, பக்கத்திலுள்ள மற்றொரு ஸ்டுடியோவுக்குப் போய், தம் காதலரைப் பார்த்துவிட்டு சாவகாசமாகத் திரும்பி வந்தாராம். அந்த நிமிஷமே இந்த நக்ஷத்திரத்திற்கு முதலாளி சீட்டுக் கொடுத்து விட்டார். இதனால் கலங்கிவிடவில்லை அந்த நக்ஷத்திரம். 'எது வந்தால் என்னே, எது போனாலென்னே, மெய்க் காதல் ஒன்று இருந்தால்' என்ற பாட்டு என் நினைவுக்கு வருகிறது இந்த சந்தர்ப்பத்தில்!

* * *

இந்த 'திடீர் நக்ஷத்திர'த்தின் அபிமானத்தைப் பெற்ற அந்த நடிகர் ஒரு நாள் இரண்டாயிரம் ரூபாய்களுக்கு ஜவுளிகள் எடுத்தார். கடையில் அவரை சந்தித்த நண்பர் ஒருவர், 'என்ன விசேஷம்?' என்று கேட்டதற்கு, 'என்னய்யா பண்ணுவது; இரண்டு பெண்டாட்டிக்காரனாகி விட்டேன்!' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டாராம் நடிகர். நண்பர் வாய்விட்டுச் சொல்லவில்லை என்றாலும், 'புதுப் பெண்டாட்டி வாழ்வு எத்தனை நாளைக்கோ?' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டிருப்பார்.



சென்ற மாதம் பரபரப்பை உண்டு பண்ணியுள்ள மற்ருெரு செய்தி, ஒரு நாட்டிய ஜோடி பிரிந்துவிட்டதுதான். வெகு காலமாகச் சேர்ந்தே நாட்டியம் ஆடிவந்த இந்த சகோதரிகள் அபிப்பிராய பேதமும், மனஸ்தாபமும் ஏற்பட்டுப் பிரிந்து விட்டனர். அக்காவுக்கு ஏற்பட்ட காதல் நோயைக் கண்டு வெகுண்டாள் தங்கை. தன் சொந்த விஷயத்தில் தலையிடத் தங்கைக்கு உரிமை கிடையாது என்பது அக்காவின் கட்சி. முடிவு இருவரும் பிரிந்து விட்டதுதான். தங்கையின் பெயர், அக்காவின் பெயரையும் தன் முன்னுல் ஒட்டிக் கொண்டு வழங்கி வந்தது. இனியும் தங்கை தன் பெயரை அப்படியே வைத்துக் கொள்ளும் 'யோக'த்தை .அவருக்கு அக்கா அளிப்பாரா ? அப்படி அக்கா அளிக்க மறுத்தால் தங்கை என்ன செய்வார் ?—என்பதுதான் ரஸிகர்கள் கேட்கக் கூடிய ரஸமான கேள்வி.

* * *

இப்படி ஜோடிகள் பிரிவதைக் கூறும் போது, அவர்களுடைய எதிர்காலத்தைக் குறித்தும் சொல்லவே தோன்றுகிறது. நடராஜ்–சகுந்தலா கோஷ்டிக்கு இருந்து வந்த நற்பெயர் அவர்கள் தனித் தனியாகப் பிரிந்ததும் நிலைத்து நிற்கவில்லை. ஹாஸ்ய ஜோடிகளிடையே கூட இதற்கு உதாரணங்கள் காட்டலாம். என். எஸ். கிருஷ்ணன் இல்லாது டி. ஏ. மதுரம் நடித்த சில படங்களில் அவர் சோபிக்க வில்லை. இதே போல காளி என். ரத்னம்–ஸி. டி. ராஜகாந்தம் ஜோடி பிரிந்தது சினிமா ரஸிகர்களுக்குப் பெரியதொரு ஏமாற்றம் தான்.

* * *

சில வருஷங்களுக்கு முன்னுல் நடந்த ரஸமான சம்பவம் இது: தமிழ்ப் பட உலகின் ஆதிகால நடிகையான ஒருவரைத் தம் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்வதற்காக, (தம் டைரெக்டருடன்) பட முதலாளி நடிகையின் பங்களாவுக்குப்போனுர். நடிகை, "படத்தில் எனக்கு எந்த வேஷம் கொடுப்பதாகஉத்தேசம்?" என்று கேட்டார். "உங்களுக்கு நிறைய 'ஸ்கோப்' உள்ள வேஷம். அந்த வேஷத்தில் பிரமாதமாக சோபிக்க முடியும். கதாநாயகியின் தாயார் வேஷம்" என்று டைரெக்டர்கூறினுர். உடனே நடிகைக்கு வந்த கோபத்தைப்போல், தாம் அதற்கு முன் தம் ஆயுளில் வேறு யாரிடமுமே கண்டதில்லை என்று கூறிப் பட முதலாளி ஆச்சரியப் பட்டார். "நன்ருயிருக்கிறது! தாயார் வேஷத்தில் நடிக்கும்படி என்னை அழைக்க உங்களுக்கு

டெஸ்பி பிலிம்ஸின் ''உண்மையின் வெற்றி'' தமிழ்ப் படத்தில் மேனகா வனராணியாக நடிக்கிறார்.

எவ்வளவு துணிச்சல்? என்னைவிட அதிகமான வயதுடைய நடிகைகளெல்லாம் கதாநாயகிகளாக நடிக்கும்போது என்னை தாயார் வேஷமிடச் சொன்னது என்னை அவமானப் படுத்துவது போல இருக்கிறது'' என்று சீறி விழுந்தாராம் நடிகை.

* * *

இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? அப்பொழுது தாயார் வேஷத்தில் நடிக்க மறுத்த அந்த நடிகை, தமக்கு யாருமே கதாநாயகி வேஷம் தர முன் வராததால்—அதற்குப் பிறகு ஒரு புராணப் படத்தில், தாம் ஏற்கெனவே பல படங்களில் கதாநாயகியாக நடித்த ஒரு நடிகருடன் (அவருடைய மனைவியாக—ஆனால் தாயார் வேஷத்தில்தான்!) நடித்தார்! இப்பொழுதுகூட ஒரு படத்தில் இந்த நடிகை தாயார் வேஷத்தில் தான் நடித்து வருகிறார்!

* * *

தாயார் வேஷம் என்றதும் ஒரு ரஸமான விஷயம் நினைவுக்கு வருகிறது. கொஞ்சம் வயதான பாகங்களில் சில படங்களில் நடித்துள்ள ஒரு பாடகி—நடிகையைக் குறித்தது அது. அந்த நடிகைக்கு இருபது வயதுக்கு மேற்பட்ட ஒரு மகன் இருக்கிறான். இவ்வளவு வயதான மகன் இருக்கிறான் என்றால் அந்த நடிகையின் வயது என்னவாக இருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்! தமக்கு இவ்வளவு வயதான ஒரு மகன் இருக்கிறான் என்பது தெரிந்தால் தமது உண்மை வயது என்னவென்பது வெளிப்பட்டு விடுமே என்பது நடிகையின் பயம். ஆகவே எல்லோரிடமும் அந்த நடிகை, தன் மகனை 'தன் தம்பி' என்று கூறி வருகிறார்! பையனும் நடிகையைத் 'தன் அக்கா' என்றே கூறி வருகிறான்! ஆனால் பாவம், நடிகையை நேரில் பார்க்கிறவர்களுக்கு 'நடிகை மிகவும் வயதானவர்' என்பதை அவருடைய 'பொல்லாத' முகம் காட்டி விடுகிறதே!

134124

தங்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகளைப் பிறருடையது என்று கூறாமல் கூறிக் கொள்ளும் இந்த ரகத்தைச் சேர்ந்த நடிகைகள் பலர் இருக்கிறார்கள். தங்களுக்குக் குழந்தை இருக்கிறது என்று தெரிந்தால், 'ரஸிகர்களுக்குத் தங்களிடமுள்ள மதிப்புக் குறைந்து விடுமோ' என்ற பயம்தான் காரணம். அதற்காக அவர்கள் தங்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தங்கள் சகோதரியினுடையது, அல்லது சகோதரனுடையது என்று தயங்காமல் கூறிவிடுகிறார்கள். மற்றொரு ரகம்—'அபவாத'த்திற்கு அஞ்சி உண்மையை மறைக்கிறவர்கள். அதாவது, கணவனில்லாமல் பிள்ளை பெற்ற வர்க்கத்தினர் அவர்கள்!

அச்சை அழகுபடுத்துவது அருமையான பிளாக்குகளே!

மூவர்ண, இருவர்ண, பிளாக்குகள், லைன், ஆப்டோன் முதலிய எந்த விதமான பிளாக்குகளையும் துரிதமாய் தயாரித்துக் கொடுக்கிறோம்.

விவரங்களுக்கு:

கமர்ஷியல் பிரின்டிங் & பப்ளிஷிங் ஹவுஸ்

போன்: 4037

46, அரண்மனைக்காரத் தெரு

சென்னை-1

குண்டூசியைக் கேளுங்கள்.

இந்த ஊசியில் வெளி வந்துள்ள கேள்விகள் அவ்வளவும் 'காந்திஜி ஸ்தூபி நிதி'க்குக் காணிக்கை அளித்த வாசகர்களின் கேள்விகள்

—ஆசிரியர்

எஸ்.ஈ.எம். ஜக்கிரியா (சொல்லுமாங்குடி)

பவளக்கொடியில் கதாநாயகியாக நடித்த எம். எஸ். சரோஜினிக்கு திருமணம் ஆகிவிட்டதா? புருஷன் பெயர் என்ன? குழந்தைகள் உண்டா? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? விலாஸம் தெரிவிக்கவும்.

எனக்குத் தெரிந்த வரையில் அவர் "திருமணத் தொல்லை"களுக் கெல்லாம் ஆளாகி விடவில்லை! "குழந்தை சரோஜினி"க்கு குழந்தைகளும் கிடையாது. தற்போது அவர் சும்மா தான் இருக்கிறார். விலாஸம்: C/o பக்ஷிராஜா ஸ்டுடியோ, கோயமுத்தூர்.

வி. நடராஜன் (?)

பானுமதிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? கணவர் பெயர் என்ன? பரணி பிக்சர்ஸ் அவரது சொந்தக் கம்பெனியா?

ஆம்; சொந்தக் கம்பெனிதான். பானுமதி டைரெக்டர் ராமகிருஷ்ண ராவை மணந்து கொண்டிருக்கிறார். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தைகூட இருக்கிறது.

• • •

வைஜயந்திமாலாவுக்கு கலியாணம் ஆகிவிட்டதா? அவருக்கு ஒழுங்கான முறையில் கடிதம் எழுதினால் பதில் எழுதுவாரா? கடிதத்தை எந்த பாஷையில எழுதவேண்டும்?

எந்த பாஷையில் எழுதினாலும் உமக்குப் பதில் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. எதற்கும் முயந்சித்துப் பாரும். 'வாழ்க்கை'யில் விவாஹம் வாய்த்ததே தவிர, அவருக்கு இன்னும் விவாஹ வாழ்க்கை வாய்க்கவில்லை.

• • •

பால நாகம்மா படத்தில் நடித்த காஞ்சனமாலா என்னவானார்? அவர் ஏன் படங்களில் நடிக்கவே காணோம்?

காஞ்சனமாலாவுக்கு சித்தம் ஸ்வாதீனமற்றுப் போனதால் படவுலகிலிருந்து விலகி விட்டார்.

• • •

நான் சினிமா நடிகன் ஆக விரும்புகிறேன். எனக்கு நன்றாகப் பாடத் தெரியாது. ஆனால் 'எந்தக் காரியத்தையும் செய்து விடலாம்' என்ற தைரியமிருக்கிறது. தாங்கள் சிபார்சு செய்ய முடியுமா?

'நீர் சினிமாவில் சேர விரும்புவதாக'ச் சொன்னதிலிருந்தே உமக்கு, 'எந்தக் காரியத்தையும் செய்து விடலாம்' என்ற தைரியம் இருப்பதாகத் தெரிந்து கொண்டு விட்டேன்! இந்த தைரியம் உள்ள எத்தனையோ வாலிபர்கள் சினிமாவில் சேர முயன்று கொண்டேயிருக்கிறார்கள். நீரும் அந்தக் கோஷ்டியில் சேருவதில் எனக்கு ஆட்சேபனையே யில்லை. என் சிபார்சுக்குப் பதில் அதிர்ஷ்ட தேவதையின் சிபார்சிருந்தால் நீர் வெற்றிபெற முடியும். உமக்கு அழகிருந்தால் போதும்; பாட்டு அவசியமில்லை.

ரெ. லெட்சுமணன் (கூரியானூர்)

மஹாலிங்கம், சின்னப்பா, எம். கே. டி. பாகவதர், ஹொன்னப்ப பாகவதர், சுப்பிரமணிய பாகவதர், கணேச பாகவதர், சிறுகளத்தூர் சாமா, தண்டபாணி தேசிகர், வி. வி. சடகோபன், கொத்தமங்கலம் சீனு, கே. ஆர். ராமசாமி, பி. ஜி. வெங்கடேசன், பெருமாள் — ஆகியோரில், 1947 முதல் 1950 வரையில் நடிப்பிலும், பாட்டிலும் யாருக்கு அதிகப் புகழ்?

சினிமாவைப் பொருத்த வரையில், இந்த வருஷங்களில் மஹாலிங்கத்திற்கே இப் புகழ் இருந்து வந்தது.

* * *

எம். கே. டி. பாகவதர் ஒன்பது படங்களில் பாடிப் புகழ் பெற்றிருக்கிறாரே! மேற்சொன்ன நடிகர்களில் ஒருவர் பாகவதரை விட நன்றாகப் பாடிப் புகழ் பெற்று விட்டார் என்று நான் கூறுகிறேன்!

நீர் மஹாலிங்கத்தை மனதில் கொண்டிருப்பதாக ஊகிக்கிறேன். அவர் சில படங்களில் நன்றாகப் பாடி பாகவதரவ்வளவு புகழைப் பெற்றார் என்பதை நான் மறுக்கவில்லை.

* * *

கச்சேரிகளிலும் சரி; சினிமாவிலும் சரி; எம். எஸ். சுப்புலக்ஷ்மியைப் போல் பாடக்கூடியவர் இல்லை என்று நினைக்கிறேன். சரிதானா?

எம். எஸ். சுப்பிலக்ஷ்மியின் சங்கீதம் அதி இனிமையானது, ரஸிகர்களால் பெரிதும் விரும்பப்படுகிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் எனக்கு அதிகமாகப் பிடிப்பது டி. கே. பட்டம்மாளின் சங்கீதம்தான்.

* * *

வஸந்த கோகிலம், சுந்தராம்பாள், டி. கே. பட்டம்மாள், பி. ஏ. பெரியநாயகி, ஜீவரத்தினம், சூர்யகுமாரி, கே. வி. ஜானகி, வஸந்தகுமாரி, ராஜேஸ்வரி, டி. எஸ். பகவதி, லீலா, இவர்களை சங்கீதத் திறமைக்கேற்ப வரிசையாகக் கூறவும்.

சங்கீதத்தை எடை போடுவதற்கு நீர் கூறும் வழி சிறந்ததல்ல. இவர்கள் எல்லோருக்குமே சினிமாவில் புகழும், ஆதரவும் இருந்து வருகிறது.

'வெண்ணிலாவும் வானும் போலே இணை பிரியாக் காதலர்களாய் இருப்போம் நாமே' என்கிறார் அஞ்சலியிடம் நாகேஸ்வர ராவ். பிரதிபாவின் "ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" தெலுங்குப் படத்தில்.

* * *

பி. யு. சின்னப்பா எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? அவரது தகப்பனாரின் பெயர் என்ன?

சின்னப்பா சுபனா வேளாள ஜாதியைச் சேர்ந்தவர். தகப்பனாரின் பெயர் உலகநாத பிள்ளை.

ஆர்யமாலாவில் கிளி விற்கும் போது என். எஸ். கிருஷ்ணன் பாடும் பாட்டு அவராலேயே பாடப்பட்டதா? அல்லது இரவல் குரலா?

இரவல் குரல் அல்ல; அதை அவரே தான் பாடியிருக்கிறார்.

ஆர். நடராஜன் (பாக்கம்பாடி)

டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? விலாஸம் என்ன? ரஸிகர்களின் கடிதங்களுக்கு அவர் பதில் அளிப்பாரா?

ராஜகுமாரி இன்னமும் 'கன்னிகா குமாரி'யாகவேதான் இருந்து வருகிறார். அவரது 'பவனம்' சென்னை, தியாகராயநகர், ஹபிபுல்லா ரோடில் உள்ளது. அவரெங்கே ரஸிகர்களின் கடிதங்களுக்குப் பதில் எழுதப்போகிறார்.

எம். கே. டி. பாகவதர் தற்போது திருச்சியில் வசிக்கிறாரா? அல்லது வேறு எங்கு வசிக்கிறார்?

பாகவதர், சென்னையில் — தியாகராய நகரில் வசித்து வருகிறார்.

* * *

மஹாலிங்கம் புது வீடு கட்டி கிரஹப் பிரவேசம் செய்தாராமே? அவ் வீட்டு விலாஸம் என்ன?

இது தவறான செய்தி. இந்த வீட்டிற்குள் மஹாலிங்கம் வெகு நாளைக்கு முன்பே பிரவேசம் செய்துவிட்டார். முன் புறத்தை மட்டும்தான் மாற்றிக் கட்டியிருக்கிறார். விலாஸம் :— 129, ராயப்பேட்டை ஹைரோடு, மைலாப்பூர், சென்னை.

கே. பி. செல்லம் (குலுக்கப்பாரா)

நடிகர் மஹாலிங்கமும், புல்லாங்குழல்-இசைத்தட்டு கொடுத்திருக்கும் மஹாலிங்கமும் ஒரே நபர்தானா?

இல்லை. ஆனால் இருவருடைய (டி. ஆர்.) முதல் எழுத்துகளும் ஒன்றாய் இருப்பது போலவே சில விரும்பத்தகாத குணங்களும் இவர்களிடம் பொதுவாக உள்ளன.





லாவண்யா பிக்சர்ஸார் பணச் செலவை லக்ஷியம் செய்யாமல் பிரம்மாண்டமான காட்சிகளை ஜோடித்து ''பாரிஜாதம்'' தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகிறார்கள். மேலே உள்ளது பாமாவின் அந்தப்புறக் காட்சி.

வி. ராம்ஸ்வாமி (கரையாங்காடு)

டி. ஆர். மஹாலிங்கத்தின் சொந்த ஊர் எது? வயது என்ன? மச்சரேகை படம் என்னவாயிற்று?

மஹாலிங்கத்தின் சொந்த ஊர் தென்கரை. வயது 26 ஆகிறது அவருக்கு. ''மச்சரேகை'' படம் அநேகமாக முடிந்து விட்டதால் சீக்கிரமே வெளிவந்து விடுமாம்.

வாஹு ராதாகிருஷ்ணய்யா (வாலாஜாப் பேட்டை)

பிரபல நடிகர் பி. யு. சின்னப்பாவுக்கு சகோதரர்கள் உண்டா? அவரது தற்போதைய விலாஸம் தேவை.

சின்னப்பாவுக்கு சகோதரர்கள் கிடையாது. இரு சகோதரிகள் மட்டும் உள்ளனர். 'பி. யு. சின்னப்பா, சினிமா நடிகர், கீழ்ப்பாக்கம்' என்று எழுதினால் போய்ச் சேர்ந்துவிடும் கடிதம்.

எஸ். குருநாதன் (திருவனந்தபுரம்)

காஞ்சனமாலா இப்பொழுது ஏதேனும் படங்களில் நடிக்கிறாரா?

[வி. நடராஜனுடைய கேள்விக்கு அளித்துள்ள பதிலைக் கவனியும்.]

எஸ். வெங்கடாசலம் (காளஹஸ்தி)

டி. எஸ். பாலய்யா படங்களில் நடிப்பது போலவே வாழ்க்கையிலும் முரட்டு மனிதரா?

ஆம்; பால்யத்தில், அவர் படத்தில் நடித்திருப்பதைவிட முரட்டு மனிதராகத்தான் இருந்தார். ஆனால், ''உத்தம புத்திரன்'' படத்திற்குப் பிறகு அவர் தம் முரட்டுத்தனங்களையெல்லாம் ஒடுக்கிக்கொண்டு விட்டாராம்.

ந. அ. ஜமால் முஹம்மது (பண்டாரவாடை)

வைஜயந்தி மாலாவின் வெற்றிக்குக் காரணம் என்ன?

அட..... டடடா! இது தெரியாதா? சங்கோசமற்ற இயற்கையான நடிப்புதான்.

ஆர். எஸ். ராமலிங்கம் (காரைக்கால்)

உத்தம புத்திரன், மதன காமராஜன் ஆகிய படங்களில் பாடியுள்ள எம். வி.

மனைவி:—என்ன ! என்ன இது ! வீட்டிலுள்ள புடவை, ஜமுக்காளங்களையெல்லாம் எதற்காக கழுத்தில் போட்டுக் கொண்டு நிற்கிறீர்கள் ?

நடிகர்:—அடுத்த வாரம், நான் நாடகங்களில் நடிக்கப் போகிறேனே. ஏராளமான மாலைகள் என் கழுத்தில் விழும். அவைகளைத் தாங்குவதற்காகத்தான் இப்பொழுதே பழகி வருகிறேன்.

ராஜம்மா ஏன் இப்பொழுது படங்களில் சொந்தக் குரலில் பாடுவதில்லை?

அவரது பாட்டை ரஸிகர்கள் பிரமாதமாக ரஸிக்கவில்லை என்ற காரணத்தினுல்தான்.

வி. டி. கிருஷ்ணமூர்த்தி (திருக்காட்டுப்பள்ளி)

நான் சினிமாவில் நடிக்க ஆவலுள்ளவனுக இருக்கிறேன். மற்றும் என் குழந்தைகளையும் சினிமாவில் சேர்த்துவிட விரும்புகிறேன். இதற்காக யாரை அணுகினல் காரியம் கைகூடும் என்பதைத் தெரிவிக்கவும்.

உம் மனேபீஷ்டம் நிறைவேற வேண்டுமானுல், நீர் ஒரு படமுதலாளியாகிவிடுவதுதான் சிறந்த வழி! அதற்கான ஐசுவரியம் இல்லையே என்று கேட்கிறீரா? பட முதலாளிகளைவிட கடவுள் சீக்கிரமாக மனமிரங்கிவிடுவார். அவரைக் குறித்துத் தவம் செய்யும்!

எம். எம். எஸ். முஹம்மது முஹைதீன் (ஹிங்குலே, இலங்கை)

பி. கே. சரஸ்வதி தற்போது எந்தெந்தப் படங்களில் நடித்துவருகிறுர்? அவரது விலாஸம் தெரிவிக்கவேண்டுகிறேன்.

பி. கே. ஸரஸ்வதி தற்போது ஏவி.எம். தயாரித்துவரும் "ஓர் இரவு" படத்திலும், மற்றும் "விதி" என்ற படத்திலும் நடித்துவருகிறுர். விலாஸம்:—25, பெருமாள் முதலி தெரு, ராயப்பேட்டை, சென்னை.

வி. கே. நடராஜன் (கோயமுத்தூர்)

குண்டூசியாரே! நான் உம்முடைய ஆற்றலை மெச்சி உமக்கு ஒரு சிற்றுண்டி விருந்தை அளிக்க உத்தேசித்திருக்கிறேன். சீக்கிரமே அழைப்பு அனுப்புகிறேன். தாங்கள் கட்டாயம் வரவேண்டும்.

விருந்து சாப்பிடுவதில் நான் மிகுந்த ஆற்றல் உடையவன் என்று உமக்கு யார் சொன்னது? விருந்திற்காக நீர் செலவிட நினைத்திருக்கும் தொகையை 'காந்திஜி ஸ்தூபி நிதி'க்கு அனுப்பி வைத்தீரானுல் உம் 'ஆற்றலை' நான் மிகப் பாராட்ட முடியும்.

* * *

நான் "கலைஞர்கள் சங்கம்" என்ற ஒரு சங்கத்தை நிறுவ நினைக்கிறேன். இச்சங்கத்திற்கு எம். கே. டி. பாகவதரைத் தலைவராகவும், என். எஸ். கே. யை உப தலைவராகவும், டி. ஆர். மஹாலிங்கம் கே. ஆர். ராமசாமி காரியதரிசிகளாகவும், தங்களை பொக்கிஷதாரராகவும் ஏற்படுத்த விருப்பம். உங்களுக்குச் சம்மதந்தானு?

இல்லை. எனக்குப் பதில் பி. யு. சின்னப்பாவை அந்த ஸ்தானத்திற்கு நியமிப்பது பொருத்தமாயிருக்கும்.

வி. கே. முத்தய்யா (பம்பாய்-17)

1948ல் நியூடோன் ஸ்டுடியோவில் நல்ல தம்பி ஷூட்டிங் நடந்துவந்தபோது, ஒரு நாள் பானுமதி ஒரு சிறு பையனை காரில் வைத்துக்கொண்டு

ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ள "நீலக் கடல்" அல்லது "சமுத்திர சுந்தரி" என்ற தமிழ்ப் படத்தில் நடித்திருக்கும் ஜீன் சிமன்ஸ்.

விரைவில் வெளிவரப் போகும் ''மச்ச ரேகை'' தமிழ்ப் படத்தில் மஹாலிங்கமும், எஸ். வரலக்ஷ்மியும் நடிக்கிருர்கள்.



சாந்தமே உருவான சாந்தகுமாரியின் உணர்ச்சி மிகுந்த நடிப்பை "மச்ச ரேகை" தமிழ்ப் படத்தில் காணலாமாம்.

டி. பி. சுந்தரத்தின் டைரெக்ஷனில் தயாராகிவரும் "மாயா ரம்பா" தெலுங்குப் படத்தில் ஜி. வரலக்ஷ்மி நடிக்கிருர்.

சமரியா வெளியிடான "மாயா ரம்பா" தெலுங்குப் படத்தில் பிரபல ஆந்திர அழகி அஞ்சலி தேவியும் தோன்றி நடிக்கிருர்.

விரைவில் வெளிவரப் போகும் "உண்மையின் வெற்றி" தமிழ்ப் படத்தில் தோன்றுகிறார் டி. ஏ. ஜெயலக்ஷ்மி.

மாடர்ன் தியேட்டர்ஸார் சீக்
கிரமே வெளியிடப் போகும்
"மந்திரி குமாரி"யில் நம்பி
யார் ராஜகுருவாக நடிக்கிறார்

சாஹூ மோடக்கும், மீனு குமாரியும் நடித்த "வத்ஸலா கல்யாணம்" ஹிந்திப் படம் இப்பொழுது தமிழில் மொழி பெயர்க்கப் படுகிறது.

போனதைப் பார்த்தேன். அச் சிறு பையன் பானுமதியின் மகனா?

பானுமதிக்கு ஒரு சிறு பையன் இருக்கிறான். நீர் குறிப்பிடுவது அந்தப் பையனாக இருக்கலாம்.

என். ராமகிருஷ்ணன் (புது டில்லி)

கொத்தமங்கலம் சீனு இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் ஏன் இப்பொழுது சினிமாவில் நடிப்பதை நிறுத்திவிட்டார்? அவரது விலாஸத்தை தெரிவிக்கவும்.

சினிமாப் படமுதலாளிகள் திடீரென்று சில நடிக நடிகைகளைச் சூழ்ந்து கொள்ளுவார்கள்; சிலரை திடீரென்று கைவிட்டு விடுவார்கள். அப்படிக் கைவிடப்பட்டவர்களுள் ஒருவரே கொத்தமங்கலம் சீனுவும். ஆதலால், அவர் தற்போது நாடகம், கச்சேரி, இவைகளில் ஈடுபட்டிருக்கிறார். விலாஸம்:—14 அப்பர்சாமி கோயில் தெரு, மைலாப்பூர், சென்னை.

ச. கந்தசாமி (யாழ்ப்பாணம்)

'தாம் நடிக்கும் படங்கள் எல்லாவற்றிலும் அஞ்சலி தேவியை நடிக்க வைக்கப் போவதாய்' மஹாலிங்கம் முன்பு கூறியதாக கேள்விப் பட்டேன். ஆனால் தம் சொந்தப் படத்திலேயே அஞ்சலி தேவியை முதலில் நடிக்கச் செய்து விட்டு, பிறகு நீக்கி விட்டதேன்?

நீர் ஒரு அப்பாவி மனிதர்! மஹாலிங்கம் கூறும் வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தம் இருப்பதாக நீர் 'கற்பனை' செய்து கொண்டு விட்டீரே! ''பழகப் பழக பாலும் புளிக்கும்'' என்பது தவறு; ''பழகப் பழக பாலும் கசக்கும்'' என்பதுதான் சரி—என்பது இப்பொழுது தெரிகிறதா?

எம். சுப்பிரமணியன் (படுதார்க்கொல்லை)

எம். ஜி. ராமச்சந்திரனை வி. என். ஜானகி ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாராமே, உண்மையா?

இல்லை. கணபதி பட் என்பவரை அவர் பல வருஷங்களுக்குமுன் மணந்து கொண்டார்—என்பது தான் உண்மை.

எஸ். பொன்னையா பிள்ளை (திருநெல்வேலி)

எது சிறந்தது—பரணி லைலா மஜ்னுவா அல்லது பாலாஜி லைலா மஜ்னுவா?



மொழி பெயர்ப்பு கச்சிதமாகச் செய்யப்படவில்லை யென்றாலும், ''பரணி லீலா மஜ்னு''வுக்கே முதல் ஸ்தானம் அளிக்க வேண்டும்.

எஸ். ஜெயசந்திர நாயுடு (அரசிக்கரை)

பானுமதி, அஞ்சலி தேவி, வரலக்ஷ்மி போன்ற தெலுங்கு நடிகைகள் தமிழ்ப் படங்களில் தமிழ் பாஷையைக் கொலை செய்வதைப் பார்த்து தமிழ் நடிகைகள் கெட்டுப் போவதாக என் நண்பர் கூறுகிறார். நீர் என்ன சொல்லுகிறீர்?

கொலை செய்யும் உரிமையை தெலுங்கு நடிகைகளிடமிருந்து அவ்வளவு சுலபமாக நம் தமிழ் நடிகைகள் பறித்துக் கொண்டுவிட முடியாது! லஜ்ஜையில்லாமல் ஆடை அணிவதை மட்டுமே தமிழ் நடிகைகள் அவர்களிடமிருந்து சுலபமாகக் கற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பது உண்மை.

பி.ராதாகிருஷ்ணன்(லெப்பை குடிக்காடு)

டி. ஆர். ராமச்சந்திரன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?வயது என்ன? சொந்த ஊர் எது? விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் எத்தனை? விலாஸம் தெரிவிக்கவும்.

பிப்ரவரி மாத ''குண்டூசி''யில் வெளிவந்த ராமச்சந்திரனின் வாழ்க்கை வர்ணனையை நீர் படிக்கவில்லை என்று தெரிகிறது. மாத்வ பிராமண ஜாதியைச் சேர்ந்த அவருக்கு தற்போது 32 வயது ஆகிறது. அவரது சொந்த ஊர் திருக்காம்புலியூர். விவாஹம் ஆகிவிட்டது; அவருக்கு ஒரு பெண் குழந்தையும் உள்ளது. விலாஸம்:— நெ. 9 கோட்ஸ் ரோடு, தியாகராய நகர், சென்னை—17.

பி. எம். ரமணி (முல்லைத் தீவு,இலங்கை)

காதலியைக் காணாது காதலன் தேடவேண்டிய சமயத்திலும், காதலனைக் காணாது காதலி தேடவேண்டிய சமயத்திலும், அவர்கள் ஒரே இடத்தில் இருந்துகொண்டு பாடுவதை சில படங்களில் பார்த்தேன். இது சரியில்லை அல்லவா?

சரியல்லதான். ஆனால் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் தாங்கள் பரிதாபமாக அழுவதை (பாடுவதை)க் கேட்கச் சகிக்காத ரஸிகர்கள், காணாதவரைத் தேடிக்கொடுத்து விடுவார்கள் என்ற நம்பிக்கையாய் இருக்கலாம்!

மச்சரேகை படத்தில் டி. ஆர். மஹாலிங்கம் அஞ்சலி தேவியை நீக்கிவிட்டு வரலக்ஷ்மியைக் கதாநாயகியாக நடிக்கச் செய்துள்ளதின் மர்மம் என்ன?

மஹாலிங்கத்தின் 'ஜகஜ்ஜாலங்களி'ல் இது ஒன்று!

எம். பத்மநாபன் (பம்பாய்-19)

மாயாவதியில் அஞ்சலி தேவியை மஹாலிங்கம் முத்தமிடுவதாகக் காட்டுகிறார்களே. இதை அஞ்சலியின் கணவர் பார்த்தால் மஹாலிங்கத்தின்மீது கோபம் கொள்ள மாட்டாரா?

அசாத்தியமான சகிப்புத் தன்மை இல்லாதவர்கள் நக்ஷத்திரக் கணவர்களாக இருக்க முடியாது என்பதை நீர் தெரிந்து கொள்ளவில்லையே!

மேகராணி சத்தியநாதன்
(சிந்தாதிரிப்பேட்டை)

சினிமாப் படங்களில் காதலர்களாக நடிக்கும் நடிக, நடிகைகள் வாழ்க்கையிலும் காதலர்களாக மாறி விடுகிறார்களே? ஏன்?

''இயற்கையான நடிப்பில்'' தாங்கள் மிகத் தேர்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்காகப் போலும்!

டி. எஸ். உமாபதி (திருச்செங்கோடு)

ரத்னகுமார் படத்தில் பானுமதி, சின்னப்பா இவர்களுக்கு பரம தரித்திர நிலைமையிலும் அவ்வளவு நல்ல ஆடைகள் எவ்விதம் கிடைத்தன?

அவர்களைப் பிடித்த பரம 'தரித்திரம்' அவர்களது ஆடைகளையும் பிடிக்க மறந்துவிட்டது!

ஆர். எஸ். ரத்தினம் (கொழும்பு)

நாம் இருவர், வாழ்க்கை ஆகிய இரு படங்களில எது சிறந்தது?

''வாழ்க்கை''தான்.

''மலர்'' (திருச்சி)

நான் வைஜயந்திமாலாவின் பூரண அன்பை எவ்விதம் பெற முடியும்?

தற்போதைக்கு நீர் அவரது அன்பைப் பெற வேண்டுமானல் முதலில் கோர்ட்டாரின் அனுமதியைப் பெற்றாக வேண்டும்! தெரிந்ததா?

ஆர். சங்கர் (திருவனந்தபுரம்)

நடன சகோதரிகளான லலிதா-பத்மினி இவர்களில், நான் பத்மினி

தற்போது சென்னையில் காண்பிக்கப்பட்டு வரும் விஜயாவின் "சௌகார்" தெலுங்குப் படம் தமிழ் ரஸிகர்களின் நல்லாதரவைப் பெற்று வருகிறது. மேலேயுள்ளது அப் படத்தில், ஸ்ரீ வத்ஸலா, ஜானகி, சாந்தகுமாரி ஆகியோர் தோன்றும் காட்சி.

யை விவாஹம் செய்து கொண்டால் தாங்கள் ஆசிர்வதிப்பீர்களா?

இந்த அசாத்தியமான காரியத்தில் நீர் வெற்றி பெற்றுவிட்டால் என் ஆசீர்வாதத்திற்குத் தானு குறைவிருக்கும்!

கே. சொக்கலிங்கம் (சொக்கன்பதி, மதுரை)

பானுமதியின் விலாஸம் எனக்குத் தேவை.

"C/o பாணி பிக்சர்ஸ், வைத்திய ராமன் தெரு, தி. நகர், சென்னை-17" என்ற விலாஸம் உம் தேவையைப் பூர்த்தி செய்யுமாக.

எஸ். டி. கருப்பையா (அறந்தாங்கி)

வைஜயந்திமாலா தன் தகப்பனருக்கு பதில் ஒரு வக்கீலிடம் இருப்பதாகக் கூறுகிறார்களே; ஏன்?

வைஜயந்திமாலாவின் கார்டியன் சம்பந்தமாக நடந்த வழக்கின் தீர்ப்பில், 'அவரது சொத்துக்களுக்கு ஒரு வக்கீல் கார்டியனுக நியமிக்கப்பட்டிருக்கிறார்' என்பதுதான் சரியான தகவல். வைஜயந்தி வசித்து வருவதெல்லாம் தம் தகப்பனருடன்தான்.

ஏ. கே. லால் (சென்னை-15)

சில தென்னாட்டுப் பிரபல சினிமா நக்ஷத்திரங்கள் தங்களை நாடி வந்த ரஸிகர்களை கேவலமான முறையில் நம்பிக்கைத் துரோகம் செய்த வரலாறுகளைத் தக்க ஆதாரங்களுடன் நிரூபித்தால் அவற்றை 'குண்டூசி'யில் பிரசுரிப்பீர்களா?

நியாயத்தை ஆதரிப்பதே எங்கள் தர்மம். மேற்படி விவரங்களை எழுதி அனுப்பும். உசிதமானுல் வெளியிடுகிறோம்.

• •

சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்த "சினிமா விசாரணைக் கமிட்டி" சினிமா ரஸிகர்களைச் சந்தித்து அவர்களது அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளாததேன்? அவர்கள் படமுதலாளிகளின் அபிப்பிராயங்களை மட்

டும் (ஒரு தலைப் பட்சமாக) கேட்டுக் கொண்டால் போதுமா?

நிச்சயம் போதாது. அவர்கள் சினிமா ரஸிகர்களின் அபிப்பிராயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். இது சம்பந்தமாக "சினிமா ரஸிகர்கள் சங்கம்" தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாக.

• •

நல்ல தம்பி, இன்பவல்லி, பொன்முடி, வேலைக்காரி, விஜயகுமாரி ஆகிய படங்களில் துவேஷப் பிரசாரங்கள், கோயில்களை அவமதிப்பது போன்றவை, கதை அமைப்பிலும், சம்பாஷணைகளிலும் மறைமுகமாகப் புகுத்தப்பட்டுள்ளது சாதாரண ஜனங்களுக்குக்கூடத் தெரிகிறதே. தணிக்கை போர்டாரின் கண்களுக்கு மட்டும் இவை எப்படித் தெரியாமற் போய்விட்டன?

தற்போதைய தணிக்கை விபரீதங்களைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். தணிக்கை விதிகள் என்னவோ 'அழகாக' வகுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அங்கத்தினர்கள் கேள்விமுறையற்ற முறையில் தணிக்கை செய்யும் அலங்கோலத்தைப் பார்த்தால், அவர்கள் இந்த விதிகளை படித்திருப்பார்கள் என்றே நம்ப முடியவில்லை.

ப. ஈ. சீ. வாசன் (கடலூர் புதுநகர்)

பொன்முடி படத்தின் வசனங்களை எழுதியவர் யார்? ஏனெனில், அவரது பெயர் படத்தில் காண்பிக்கப்படவில்லை.

இப்படத்தின் வசனங்கள் ஸ்டுடியோவிலுள்ள சிலருடைய கூட்டு முயற்சியில் உருவாகியதாம்.

எம். சுப்ரமண்யன் (படுதார்க்கொல்லை)

'டி. ஆர். மஹாலிங்கத்திற்கும், பிரபல நாட்டிய சகோதரிகளுக்கும் ஏதோ தொடர்பு உண்டு' என்கிறார்களே; உண்மைதானா?

அட, எழவு, நீர் சும்மா இரும், ஐயா! ஏதேதோ 'விரும்பத் தகாத' விஷயங்களையெல்லாம் கிளறுகிறீரே!

எஸ். தக்ஷிணாமூர்த்தி (வெள்ளலூர்)

இன்பவல்லி படத்தில் தாஸி பத்மா அன்பழகனின் பின் வருகையை

ஒரு வரம் கோருக!

இனி நீங்கள் சிறிதும் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. பெரு முயற்சியால் தயாரிக்கப்பட்ட "வசீகரன் கைக்குட்டை" மூலம் நீங்கள் விரும்பிய பெண் கிடைக்கக்கூடும். சிரிப்பு தவழும் குழந்தைகள் உங்கள் மடியில் கொஞ்சலாம். கடின சித்தம் படைத்தவர்கள்கூட உங்கள் காலடியில் விழுவர். உங்களுடைய சக்திவாய்ந்த ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நிற்பர். வேலை கிடைப்பது இனி கனவாக இருக்காது. மலடியாக இருக்கும் மனைவிக்குக்கூட குழந்தைகள் பிறக்கும். இறந்தவர்களின் ஆத்மாவுடன் தொடர்பு ஏற்படும். உங்களுடைய மூதாதையர்களின் புதையல்கள் எங்கிருக்கின்றனவென்பது உங்களுக்கு கனவில் அறிவிக்கப்படும். கோர்ட் தாவாக்களில் வெற்றி, லாட்டரியிலும், பேரம், ஹேஷ்யங்களிலும் வெற்றிமேல் வெற்றி. பரீட்சையில் சுலபமாக தேர்ச்சி பெறுவீர்கள். தொழிலில் லாபம் கிட்டும். உங்களுடைய துரதிஷ்டங்கள் நீங்கிவிடும். அதிர்ஷ்டம் உங்களுக்கு பாதசேவை செய்யும். சுருங்கக்கூறுமிடத்து உங்களுடைய விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும். உத்திரவாதம்: உங்கள் மனம் விரும்பியதை நீங்கள் அடையாவிடில் கைக்குட்டையை 6 மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம். வசீகரன் கைக்குட்டை நெ. 1, ரூ. 1-15-0. விசேஷ சக்தி வாய்ந்த கைக்குட்டை ரூ. 3-15-0. 24-மணி நேரத்திற்குள் இதன் மகிமையைக் காணலாம். நமது "வசீகரன்" கைக்குட்டையால் இக்கலியுகத்தில் இந்த ஸ்வாமி உண்மையை ஸ்தாபிக்கிறார். இதன் உதவியால் கணக்கற்றவர்கள் தங்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர். இந்த அரிய தருணத்தை தயவுசெய்து இழக்காதீர்கள்.

Prop: **BENGAL MESMERISM HOUSE (G. M.)** Hoshiarpur. Pb.

எதிர்பார்த்தே முன்னதாக அந்தப் படத்தின்மீது காதல் கொண்டாளா?

டைரெக்டர் முன்கூட்டியே அவரிடம் சொல்லி யிருப்பாரல்லவா!

ஆர். எம். ராஜு (வயல்பட்டி)

எம். கே. டி. பாகவதர், பி. யு. சின்னப்பா, டி. ஆர். மஹாலிங்கம் ஆகிய மூவருள் நடிப்பிலும் பாட்டிலும் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

பாகவதர் எப்பொழுதும் நன்ருகப் பாடுகிருர்; சுமாராக நடிக்கிருர். சின்னப்பா எப்பொழுதும் நன்ருக நடிக்கிருர்; சுமாராகப் பாடுகிருர். மஹாலிங்கமோ சில சமயம் சுமாராக நடிக்கிருர்; சுமாராக பாடுகிருர்.

ஏ. பி. முத்துப் படையாச்சி (சந்திரசேகரபுரம்)

பாபநாசம் சிவனின் விலாஸம் என்ன?

ஸ்ரீநிவாஸன் தெரு, மந்தவெளி, மைலாப்பூர், சென்னை 4.

கே. என். பெரியசாமி (மாத்தூர்)

எம். கே. டி. பாகவதரின் விலாஸம் என்ன?

25, பர்க்கிட் ரோடு, தியாகராயநகர், சென்னை 17 என்று எழுதும்.

சென்னியப்பன் (அரிசிக்கரை)

பி. யு. சின்னப்பாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? யாரை மணந்து கொண்டிருக்கிருர்? குழந்தைகள் உண்டா?

சின்னப்பாவுடன் சில படங்களில் நடித்துள்ள ஏ. சகுந்தலா அவரது மனைவி ஆகியிருக்கிருர். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது.

என். பாலகிருஷ்ணன் (சென்னை)

சினிமா உலக ஜாம்பவானை உம் அபிப்பிராயப்படி, தமிழ் சினிமா உலகில் சேவை செய்ய விரும்பும் ஒருவனுக்கு என்னென்ன யோக்யதாம்சங்கள் இருக்கவேண்டும்?

மற்ற யோக்கியதாம்சங்கள் ஏறத்தாழ இருந்தாலும், பிடிவாதமான முயற்சியும், தளராத தன்னம்பிக்கையும் முக்கியமாய் இருக்க வேண்டும்.

வி. ஆர். சந்திரன் (கொல்லங்கோடு)

நாம் அழும் போது கண்களின் மூலையிலிருந்தே ஜலம் வருகிறது.

கேள்வி நேயர்களுக்கு

இந்த ஊசியில் வெளிவந்துள்ள கேள்விகள் எல்லாம் காந்திஜி நிதிக்குக் காணிக்கை அளித்தவர்களின் கேள்விகளாகும். இதுவரை பதில் கிடைக்கப் பெருத வாசகர்கள், தாம் அனுப்பியுள்ள தொகைக்கு வேறு புதுக் கேள்விகளை அனுப்பி வைக்கும்படி கோரப்படுகிருர்கள். நீங்களும் உடனே காணிக்கையுடன் கேளுங்கள்.

ஆனல் சினிமா நடிகைகள் அழும் போது மட்டும் கண்களின் மத்தியிலிருந்து ஜலம் வரக் காரணம் என்ன?

அதுதான் இயற்கைக்கும் செயற்கைக்கும் உள்ள வித்தியாசம். சினிமா நடிகைகளுக்கு அழுகை வராத போது 'கிளிஸரைன்' திராவகத்தைக் கண்ணில் போடுவார்கள். உடனே கண்ணீர் கரை புறண்டோடும்!

வி. எஸ். மணி (அரிசிக்கரை)

வாழ்க்கை படத்தில் மீனக்ஷி தன் குழந்தைக்காக ஒரு பொட்டலத்தையும், கடிதத்தையும் போட்டுவிட்டுப் போகிருள். இவைகள் அவளுக்கு எப்படிக் கிடைத்தன?

ஏன்? அவள் வேலை செய்து சம்பாதித்த பணத்தில் வாங்கியிருப்பாள் என்று ஊகித்துக் கொள்ளலாமே.

கே. ஆர். நாராயணசாமி (காளிவேலம்பட்டி, பல்லடம்)

எம். கே. டி. பாகவதர் எந்தப் படத்தில் நடிக்கிருர்? அல்லது நடிக்கப் போகிருர்? இவற்றை விவரமாய் தெரிவிக்கவும்.

பாலாஜி பிக்சர்ஸின் கூட்டுறவில் "அமரகவி"யைத் தயாரிப்பதென்று பல மாதங்களுக்கு முன்பே பூஜையும் நடத்தப்பட்டது. ஆனல், அப்படத்தின் அசல் ஷூட்டிங் இன்னமும் ஆரம்பமாகவே யில்லை. பாகவதர் ஜெமினியுடன் ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டிருக்கிருர். படம் இனிதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கே. ஆர். ரஸாக் (திருவண்ணமலை)

குமாரி கமலாவுக்கு சகோதரிகள் இருக்கிருர்களா? அவர்களது பெயர்களென்ன?

கமலாவுக்கு ராதா, வாஸந்தி என்ற இரு தங்கைகள் உள்ளனர்.

பொதுஜனம் பேசுகிறார்

*விண்ணப்பம்

நான் இங்கிலாந்திலிருந்த போது அநேக ஆங்கிலப் படங்களுக்குச் சென்றிருக்கிறேன். படம் ஆரம்பிக்கும் முன் சிறு பிள்ளைகளைத் தவிர மற்ற எல்லாரையும் கண்டேன். சிறுவர்கள் வராததின் மர்மத்தைத் தெரிந்துகொள்ள சிலரைக் கேட்டேன். ஒரு சினிமாக் கொட்டகை முதலாளியையும் கேட்டேன். அவர்கள், "இங்கு 14 வயதுக்குட்பட்ட படம் பார்க்க அனுமதி கிடையாது. கைக்குழந்தையாக இருந்தாலும் சரி, தாய்மார்கள் அவர்களைக் கொண்டுவரக் கூடாது. சிறுவர்களுக்கென்று பிரத்தியேகப் படம் உண்டு. அதை மட்டும்தான் அவர்கள் பார்க்க அனுமதி உணடு. இது சர்க்கார் உத்திரவு" என்று எனக்குக் கூறினார்கள். இம் முறையை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதனால் சிறுவர்கள் கண்டகண்ட படங்களைப் பார்த்துக் கெட்டுப் போகாமல் தடுக்கிறார்கள் அல்லவா ?

நம் படமுதலாளிகளும் சிறுவர்களுக்கென்று ஏன் படம் பிடிக்கக் கூடாது? நமது சர்க்கார் இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

த. தா. பேதுரு
மால்டா.

நாஸ்திகப் பிரசாரம்

நாஸ்திகம் வளர்ந்துவரும் இக்காலத்தில் சினிமாவிலும் 'சீர்திருத்தம்' என்ற பெயரில் நாஸ்திகப் பிரசாரம் நடந்து வருகிறது. இதை நடத்த சிலர் முனைந்திருக்கின்றனர். இத்தப் புண்ணிய கைங்கரியத்தை மேற்கொண்டிருக்கும் ஒரு நடிகர், இதையே தாம் சினிமாவில் நடிப்பதின் லக்ஷியமாக எண்ணியிருக்கிறார் போலும்! அவர் நடிக்கும் படம் புராணப்படமாயினும் சரி, சரித்திர சம்பந்தப்பட்ட படமாயினும் சரி; அல்லது சமூகப் படமாயினும் சரி; எதிலும் தெய்வத்தின் பெயரை இழுத்துவைத்து வாயில் வந்தபடி உளறுகிறார். கடவுளைக் கல் என்றும் நம் முன்னோர்கள் காலத்திய வரலாறுகளுக்கு ஆதாரமாக உள்ள சுவடிகளைக் கிழிக்க வேண்டுமென்றும், புராணங்களைக்கொளுத்த வேண்டுமென்றும், படங்களில் பேசுகிறார். தனிப்பட்ட மனிதனின் உரிமையில் தலையிட எவருக்கும் அதிகாரமில்லை என்பது உண்மை, ஒரு சிலருக்கு இவருடைய பிதற்றல்கள் வேதவாக்காக இருக்கலாம். ஆனால் எல்லோரும் பார்க்கும் சினிமாவில், துஷ்பிரசாரம் செய்து தெய்வபக்தியுடைய தமிழ் மக்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் பாத்திரமாகாமல், தன் சொந்தக் கொள்கைகளை வெளி உலகுடன் நிறுத்திக் கொண்டு, சினிமாவில் புகுத்தாமல் இருப்பாரென நம்புகிறேன்.

எஸ். ராமஸ்வாமி
கடலூர் என். டி.

சென்ஸார் கவனிப்பார்களா?

கலையிலும் அருங்கலையான சினிமா, நமது படமுதலாளிகளுடைய அறிவின்மையாலும், தணிக்கை போர்டாரின் அஜாக்கிரதையினாலும் மிகவும் மோசமாகக் கையாளப்பட்டு வருகிறது.

நான் நேற்று எனது நண்பர்களுடன் ஒரு தமிழ்ப்படத்தைப்பார்க்கப் போயிருந்தேன், இம்மாதிரி ஒரு படம் இது வரையிலும் வெளியானதும் இல்லை, இனிமேல் வெளியாகவும் வேண்டாம். ஐயோ! ஆதி முதல் அந்தம் வரையிலும் ஆபாஸமா? காதலனும் காதலியும் நடிக்கும் காதல் கட்டங்கள் கண்கொண்டு பார்க்க சகிக்கவேயில்லை—காறித் துப்பத்தான் தோன்றுகிறது.

நமது தமிழ்ப் படமுதலாளிகள் ஹிந்திப் படங்களையே பார்த்ததில்லைபோல் தெரிகிறது. ஹிந்திப் படங்களில் காதலனும் காதலியும் பரஸ்பரம் தொடாமலேயே எவ்வளவு அழகாக உணர்ச்சியுடன் நடிக்கிறார்கள் என்பதைத் தமிழ்ப் பட முதலாளிகள் பார்க்கவேண்டும்.

ஹிந்திப் படங்களில் ஆபாஸம் என்பது மருந்துக்குக்கூடக் கிடையாது என்பதை இவர்கள் அறியவில்லை.

ஆபாஸமான கட்டங்கள் படம் பார்ப்போரின் கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளப்பி விடும் என்பதை ஏன் தணிக்கை போர்டார் கவனிப்பதில்லை. நம் பெண்மணிகள் இந்த மாதிரிப் படங்களைப் பார்ப்பதற்குக் கொஞ்சமும் லாயக்கில்லை என்பது படம் பார்த்த ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும். தவிர சினிமாப் பார்ப்பதே முதல் ஜோலியாகக் கொண்டுள்ள வாலிபர்களின் மனதில் அறிவை ஊட்டும் விஷயங்கள் பதியாவிடினும், இம்மாதிரி ஆபாஸமான கட்டங்கள் எளிதில் பதிந்து, அவர்களைக் கெட்டவழிகளில் இறக்கக்கூடும் என்பதையாவது சென்ஸார்கள் கவனித்திருப்பார்களானால் இதுபோல் ஒரு கேவலமான படத்தைத் திரையிட அனுமதித்திருக்கவே மாட்டார்கள் என்பது நிச்சயம். ஏற்கனவே கெட்டுப் போயிருக்கிற நம் சமூகம் இம்மாதிரி ஆபாசமே உருவான படங்களைப் பார்த்தால் மேலும் கெடாமல் என்ன செய்யும் ?

எனவே நமது சினிமாப்பட சென்ஸார்கள் இம்மாதிரி ஆபாஸமானதும் அசம்பாவிதமானதுமான காதல் கட்டங்களைப் படங்களிலிருந்து கண்டிப்பாக அகற்றி, அரும் கலையான சினிமா முன்னேறுவதற்கு உதவுவதுடன் நம் சமூக முன்னேற்றத்துக்கும் உதவவேண்டும் என்பதே என் ஆசை.

என். என். தாஹு
நாகர்கோவில்.

கலை வளர்ச்சி

ஜனங்கள் கலையிலும் கல்வியிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பது என்னவோ உண்மைதான். கலை என்ற பெயரையும் தாத்பர்யத்தையும் சொல்லிக்கொண்டே, கலையும் அல்லாமல், உலகில் நடக்கக் கூடியதும் அல்லாத கதைகளை நம் படமுதலாளிகள் இனிமேலாவது தயாரிக்காமல் இருக்க வேண்டுகிறேன். கதைகளில் ஓரளவு உண்மையும் கலந்திருத்தல் வேண்டும். புராணக் கதைகளையே முற்றிலும் வெறுக்கிற இக்காலத்திலும் வீண் மாந்திரீக தந்திரங்கள் நிறைந்த நவீன புராணக் கதையைப் படமாகப் பார்க்கும் காலத்து தெருவில் மாந்திரீக மாயாஜல மந்திர வித்தைகளை வேடிக்கை காண்பிப்பவர்களுடைய ஞாபகம்தான் வருகிறது. அவர்களும் இனிமேல் ஒரு வேலை இம்மாதிரி விளம்பரங்களைப் போட்டுக்கொண்டு ஒரு கொட்டகைக்குள் போய் உட்கார்ந்து கொண்டால்,

தாங்களும் காலணாக் காலணாவாகக் கெஞ்சி வாங்க வேண்டிய அவசியம் இராது என்ற முடிவிற்கு வந்து விடுவார்கள். ஏன், அம்மாதிரி இப்போதும் சில பேர் இருக்கிறார்கள்.

'இன்பவல்லி' 'மாயக்குதிரை' 'விஜயகுமாரி' போன்ற கற்பனைக்கே எட்டாததும் அறிவு வளர்ச்சிக்கு சிறிதும் பயன்படாததுமான கதைகளைப் படங்களாகப் பிடித்துத் திரையிடுவதைக் காட்டி

லும், நம் படமுதலாளிகள் சமூகக் கதைகளைப் படம் பிடிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சமூகப் படங்களுக்கு அமோகமான வரவேற்பு இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேலும், வட இந்தியாவில் தயாரிக்கப்படும் ஹிந்தி சமூகப் படங்களுக்கு இந்தியா முழுவதும் அமோக வரவேற்பு இருப்பது இந்த சமயத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம்.

கா. ஜெயராமன்
கடலூர்.

திரைப் படங்களுக்கு விளம்பரம்

“பிரசாரப் பெருமையுற்ற இக்காலத்தில் தகுந்த பிரசாரமும் பிரதானமுமான விளம்பரமுமே திரைப்படங்களுக்கு அமோக வெற்றியையும் அதிகமான பண வசூலையும் அளிக்கின்றன என்பது நாமெல்லோரும் அறிந்த உண்மை. எனினும் நம் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களோ இதை நன்கு உணர்ந்தவர்களாய்த் தோன்றவில்லை. ஏனெனில் அவர்கள் பெரும்பாலும் திரைப்பட விளம்பரங்களைத் தகுந்த முறையில் கையாளுபவர்களாயில்லை, ஆனால் மேல் நாட்டுப் படத் தயாரிப்பாளர்களோ இது விஷயத்தில் மகா மேதாவிகள். அவர்கள் குறைந்த செலவிலும், சிறந்த நூதன முறையிலும் திரைப்பட விளம்பரங்களை சிருஷ்டித்து அவற்றை வெகு சுலபமாகக் கையாளும் திறமையுள்ளவர்கள்.

உதாரணமாக, ஓர் ஆங்கிலப்படம் பார்க்கச் செல்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். படம் ஆரம்பிப்பதற்கு முன்பு, அநேகமாக நாம் பார்க்க நேரிடுவது “முன்னோட்டத் துண்டுப் படங்கள்”. இவற்றை “டிரயிலர்” என்று சொல்லுவார்கள். அதாவது, அடுத்து அத்தியேட்டருக்கு வரவிருக்கும் திரைப்படங்களின் பிரதான காட்சிகளையும், விசேஷ அம்சங்களையும், நடிக நடிகையரின் ஜாபிதாவுடன் அவர்களை அறிமுகப்படுத்தியும், மற்றும் அப்படங்களைப் பார்த்தே தீரவேண்டுமென்னும் ஆவலைத் தூண்டக்கூடிய இதர முக்கிய விஷயங்களையும் ஒன்றாய்த் தொகுத்துத் தயாரிக்கப்பட்ட துண்டுப் படங்கள். சாதாரணமாக ஒரு முன்னோட்டத் துண்டுப் படத்தை ஐந்தாறு நிமிஷங்களில் திரையிட்டு முடிப்பார்கள். படம் பார்ப்போருக்கு தாம் சொற்ப நிமிஷங்களில் பார்த்த கவர்ச்சிமிக்க சிருங்காரக் காட்சிகளை மறுபடியும் பூராவாகப் பார்க்கவே வேண்டும் என்னும் ஆவல் ஏற்பட்டுவிடுகிறது. இவ்விதம், முழுப்படத்தைக் காண்பிப்பதற்கு முன்பே அதைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலை ரஸிகர்களுக்கு உண்டாக்குவதுதான் முன்னோட்டப் படங்களின் சிறந்த குணமும் மகத்தான செய்கையுமாகும். இதைவிடச் சிறந்த திரைப்பட விளம்பரம் வேறெவ்வகையிலும் இல்லையென ந[illegible] துணிவுடன் கூறலாம். நம் படத் தயாரிப்பாளர்கள் தாம் தயாரிக்கும் படங்களுக்காக இவ்விதத் துண்டுப் படங்களைத் தயாரித்து நவீன முறையில் பிரசாரஞ் செய்வார்களாயின் நம் படங்களுக்கும் அதிக கிராக்கி ஏற்படுவதுடன் சுமாரான வெற்றியும் கிடைத்து அதன் பயனாய் சினிமாத் தொழிலும் அபிவிருத்தியடையுமென நம்புகிறேன்.’

உதயமூர்த்தி
நடேசன்
கொழும்பு.

சந்தாப் பரிசு பெற்ற கடிதம்
எழுதியவர் :
த. தா. பேதுரு,
“எச். எம். ஐ. எஸ். ராணா”
c/o பி. எப். எம். ஆபீஸ்,
மால்டா.

பட வசன நூல்கள்

சில வருடங்களுக்கு முன்பு, ‘தமிழன்’ பத்திரிகையில், “கண்ணகி வசன நூல் தயாராகிறது” என்ற ஒரு விளம்பரத்தைக் கண்டேன். ‘கண்ணகி’ படத்திலுள்ள இனிய, அமுத வசனங்களைப் படித்து இன்புறலாம் என்று கனவு கண்டேன். ஆனால் அக்கனவு இன்றும் வெறும் கனவாகவே இருக்கிறது.

இது தமிழின் மறுமலர்ச்சி யுகம். தமிழைக் கற்றவர்களெல்லாம், தாங்கள் இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்கள் என்றெண்ணிக்கொண்டு புத்தகங்களாக எழுதித் தள்ளுகிறார்கள். தமிழைக் கற்றதோடு அல்லாமல், கொஞ்சம் பணமும் படைத்தவர்கள், பத்திரிகைகளையே தொடங்கி விடுகிறார்கள். இக்கலைப் பரிட்சையில் வெற்றியின் ஒளி வீசக் கண்டவர்கள் வெகு சிலர்.

ஆனால் இதுவரை ஒருவராவது படக் கதைகளை அப்பட வசனங்களுடன் புத்தக உருவில் வெளியிடக் கிஞ்சித்தும் முயற்சி எடுக்கவில்லை. இதற்குத் தூண்டுகோலும் இல்லை. அநேகமாக மேனாட்டிலிருந்து இங்கு வரும் நல்ல படங்களுக்கு வசன நூல்கள் உண்டு. அக்கதைகள் புத்தகங்களைத் தழுவிப் படமாக்கப்பட்டனவோ, அன்றி படத்திற்குப் பிறகு புத்தகங்களாயினவோ, எப்படியாயினும், அப்புத்தகங்கள் அமோகமாக விற்பனை

யாகின்றன. அப்புத்தகங்களைப் படித்த பிறகு திரும்பத் திரும்ப அப்படத்தைப் பார்க்கவும் ஆவல் உண்டாகிறது.

நம் தமிழ் நாட்டிலும் அழகான அருமையான அமுத வசனங்களுடன் எத்தனையோ படங்கள் வெளி வந்திருக்கின்றன. 'கண்ணகி', 'குபேர குசேலா', 'மஹாமாயா', 'மீரா', 'வேலைக்காரி', 'கிருஷ்ண பக்தி', 'கன்னியின் காதலி' போன்ற இன்னும் எத்தனையோ படங்களின் வசனங்கள் மிக அற்புதமாக அமைந்திருக்கின்றன. இவையெல்லாம் புத்தக உருவில் வெளிவந்தால் அமோக ஆதரவும், வரவேற்பும் கிட்டும்; தமிழுக்கும் ஒரு சிறிய தொண்டாகும்.

வி. ஏ. சிங்காரவேல் முதலியார்
அழுக்குவத்தை.

மஹாநாடும் திட்டமும்

பிப்ரவரி மாத 'ஊசி'யின் "அபாய நிலைமை" தலையங்கம் என்போன்ற ரஸிகர்களுக்கே கலக்கம் ஏற்படுத்தியிருக்கும்பொழுது, சினிமா முதலாளிகளின் மனத்தில் நன்றாகப் பாய்ந்திருக்கும் என்பது திண்ணம். அதன்படி, 'தென்னிந்திய சினிமா மஹாநாடு' கூட்டப்படுவது அவசியம் இல்லை என்று இத்தொழிலில் லாபம் அடைந்துள்ளவர்கள் கருதக்கூடும். அதற்கு இடமிருத்தல் கூடாது. அம்மஹாநாடு கூட்டப் பெற்றால், ஒவ்வொருவரும் படத்தொழிலில் தாங்கள் படும் கஷ்டங்களை அழுது தீர்த்துவிடுவார்கள். அத்துடன் இரண்டொரு திட்டங்களை வகுத்துவிட்டு அம்மஹாநாடும் இனிது கலையும்! அதை விடுத்து பயன் பெறக்கூடிய திட்டங்களை வகுப்பதுடன், படங்களின் தோல்வியின் காரணங்களையும் ஆராய்ந்து பரிகாரம் தேடவேண்டும். படத்தொழிலின் இவ்வளவு பெரிய கஷ்டகாலத்திலும், ஒரு சில படங்கள் (ஆபாசமின்றியே!) பிரமாதமான வசூலையும், நன்மதிப்பையும் அடைந்து வருகின்றன. அம்மாதிரிப் படங்களை உதாரணத்திற்காக எடுத்துக்கொண்டு மேற்படி மஹாநாடு திட்டங்களை வகுக்க வேண்டும்.

இ. வி. கே. மூர்த்தி
திருச்சி.

ஒரு வேண்டுகோள்

"ஆறின கஞ்சி பழங் கஞ்சி" என்ற முதுமொழிக்கிணங்க நம் படமுதலாளிகள் திரும்பத் திரும்ப தாங்கள் எடுக்கும் படங்களில் பழைய நடிக, நடிகைகளையே நடிக்கச் செய்து படமெடுத்து வருகின்றனர். நடிக, நடிகையரும் தங்களாலியன்றவரை சில படங்களில் திறமையாக நடித்துப் பொதுஜனங்களின் அபிமானத்திற்கும், அன்பிற்கும் உரியவராகின்றனர். ஆனால் அதே நடிக, நடிகைகளை ஒப்பந்தம் செய்து தங்கள் படத்தை தயாரித்து வெளியிடும் மற்ற படமுதலாளிகளின் படம் தோல்வி அடைந்து விடுகிறது. எனவே, பொது மக்களின் நன்மதிப்பு அவர்களிடம் குறைந்து விடுகிறது. உதாரணமாக, 'ஞானசௌந்தரி', 'நாம் இருவர்' போன்ற படங்களில் நடித்து பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்ற டி. ஆர். மஹாலிங்கம் 'இன்பவல்லி, மாயாவதி போன்ற படங்களில் நடித்து பொதுஜனங்களிடம் நன்மதிப்பை இழந்து விட்டார். தாம் இழந்த பெயரை மீண்டும் சம்பாதிக்க அவர் இனி வரும் படங்களில் திறமையுடன் நடித்து நற்பெயர் எடுக்கவேண்டும். இது ஒருபுறமிருக்க பழைய நடிக, நடிகைகளையே மீண்டும் மீண்டும் ஒப்பந்தம் செய்து படம் எடுக்காமல், சினிமா உலகில் பிரவேசித்துத் திறமையுடன் நடித்து, பொதுஜனங்களின் அபிமானத்தையும் அன்பையும் ஆதரவையும் அடைவதற்குத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஆர்வமுள்ள இளம் நடிக, நடிகைகளை ஒப்பந்தம் செய்து கொண்டு படம் தயாரித்து, நம் பட முதலாளிகள் வெற்றி காண வேண்டும்.

இராமானுஜம்
கோவை.

சிறந்த தங்கம், வெள்ளி
நகைகளுக்கு ஏற்ற
இடம்

ஜெயின் ஜ்வல்லரி
கம்பெனி

1 நாகேஸ்வர ராவ் ரோடு
தியாகராய நகர்,
சென்னை-17.

மிஸ். புஷ்பமாலதி

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

யாவும் எனக்குத் தெரியும். ஒரு முக்கியமான விஷயம் கூற மறந்து போனேனே. நான் பார்த்ததெல்லாம் ஹிந்திப் படங்கள்தாம். "தமிழ்ப் படங்களா, சுத்த 'ராட்டன்'" என்று கூறும் கோஷ்டியைச் சேர்ந்தவள்தான் நானும். காலேஜில் படிக்கும் நான், இங்கிலீஷ் பேசத் தெரிந்துவிட்ட நான், அப்படிக் கூருவிட்டால் அது கௌரவக் குறைவாகிவிடாதா! மற்றொரு விஷயம், எனக்கு நடிகைகளைவிட நடிகர்களின் சம்பந்தமான விவரங்கள்தாம் அதிகமாகத் தெரியும். நடிகர்களைப்பற்றித்தான் நான் அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்பினேன். ஏனெனில், அந்த நடிகர்கள் கோஷ்டியில்தானே நான் என் 'இலக்ஷிய புருஷனை' வலை போட்டுத் தேடி வந்தேன்.

என் மனதிலே எந்த நடிகருக்குமே 'இலக்ஷிய புருஷன்' என்ற ஸ்தானம் நிரந்தரமாகக் கிடையாது. இந்த வாரம் ஒரு புதிய படம் பார்க்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் படத்தில் கதாநாயகனாக நடிப்பவனது நடிப்பு எனக்குப் பிடித்திருந்தால், அந்த நடிகர் என் மனதில் இலக்ஷிய புருஷனாக பதிந்துவிடுவார். அதுமுதல் எனக்கு அந்த நடிகரின் நினைவுதான்—கனவிலுங்கூட. ஆனால் இந்தத் தீர்மானம் நீடித்து நிற்காது; அல்பாயுசுடன் மறைந்துவிடும். அடுத்தபடி நான் வேறு ஒரு புதுப்படம் பார்த்து, அதில் நடிக்கும் நடிகரின் நடிப்பும் தோற்றமும் என்னை வசீகரித்துவிட்டால் அந்த நடிகர், என் மனப் பீடத்திலே ஏற்கெனவே இடம் பெற்றுள்ள நடிகரைத் துரத்திவிட்டு அந்த இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு விடுவார். இப்படியாக எந்த நடிகனுமே நிரந்தரமாக என் 'இலக்ஷிய புருஷனா'க இருந்தது கிடையாது! அப்படியிருந்தும், தன்னை மிஞ்சக்கூடியவன் எவனுமில்லை என்ற ரீதியில், திரையுலகில் தோன்றப்போகும் அந்த 'இலக்ஷிய புருஷனி'ன் வரவை நான் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தேன்.

நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. நான் கனவு கண்டு'கொண்டிருந்த அந்த 'இலக்ஷிய புருஷன்' கிடைத்தே விட்டான். ஆம்.........நிரந்தரமாக அவன் என் உள்ளத்திலே புகுந்து கொண்டான்! திரையுலகிலே புதிதாய் தோன்றியுள்ள மனோஹர்தான் அவர். பத்திரிகைகளெல்லாம் அவரைப் பற்றிப் பக்கம் பக்கமாகப் புகழ்ந்து தள்ளியிருந்தன. அவருடைய படத்தைப் பிரசுரிக்காத சஞ்சிகையே கிடையாது. அவர் நடித்த முதல் படமான "காதல் மலர்" ஒவ்வொரு நகரத்திலும் வாரக் கணக்காக ஓடிக்கொண்டிருந்தது. "காதல் மலர்" அவரை ஓர் ஒப்பற்ற நக்ஷத்திர நடிகராக்கி விட்டது. சினிமா உலகிலேயே "காதல் மலர்" புரட்சியை உண்டாக்கி விட்டது. பல படமுதலாளிகள் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் படங்களில் நடிக்க மனோஹரை ஒப்பந்தம் பேசி வந்தார்கள். இந்த விவரங்களையெல்லாம் பத்திரிகைகளில் படித்த நான், 'மணந்தால் அவரை மணப்பது, முயன்றும் முடியாவிட்டால் கன்னியாகவே காலம் கடத்துவது' என்ற முடிவுக்கு வந்து விட்டேன்.

'சினிமா உலகம் தேடித் திரிந்த நடிகர் மனோஹர்' என்று பத்திரிகைகள் வானளாவப் புகழ்ந்த நடிகர் மனோஹர் நான் தேடித் திரிந்த 'இலக்ஷிய புருஷர்' ஆகி விட்டார்!

மார்ச் பரீக்ஷை எழுதிக் கொண்டிருந்தேன். அது முடிந்தால் நான் சித்தப்பாவின் கிராமத்திற்குப் போகவேண்டியவள். அங்கு போனால் அவர் நிச்சயம் என் திருமணத்தை முடித்தே விடுவார். அப்புறம் மேலே எண்ணிப் பார்க்கவே எனக்கு பயங்கரமாக இருந்தது. ஆனால் அங்கு போகாமலும் முடியாதே! ஏன் முடியாது? என் மனதிலேயே போராட்டம் நடந்தது. அது முடிந்து, நான் ஒரு தீர்மானத்துக்கும் வந்து விட்டேன். 'நேரே புறப்பட்நுப் போய் மனோஹரை சந்தித்து விடுவது' என்பதே அந்தத் தீர்மானம்.

பத்திரிகைகளும், சில முற்போக்கான பிரமுகர்களும், "குடும்ப ஸ்திரீகள் படங்களில் நடிக்க முன்வர வேண்டும். அப்பொழுதுதான் நம் படங்கள்—மன்னிக்க வேண்டும்—'படக்கலை முன்னேறும்' என்று பறை சாற்றி வந்தார்கள். என்னுடைய தீர்மானத்திற்குத் தூண்டுகோலாக இருந்தது இதுதான். ஆம்....சினிமாவில் சேருவதுதான் நலம். எனது 'இலக்ஷிய புருஷன்' மனோஹரை சந்திக்கவும் அதுவே ஏற்ற வழியாகப் பட்டது எனக்கு.

பரீக்ஷை நடந்தது. நான் விடைத் தாள்களில் விடைகள்தான் எழுதினேனோ, அல்லது 'மனோஹர், மனோஹர்' என்று

எழுதினேனே? இதை, அந்த தாள்களைத் திருத்திய ஆசிரியரைத்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்! பரீக்ஷைகள் முடிந்த அன்றிரவே நான் சென்னையை விட்டுக் கிளம்பி விட்டேன். என் கிராமத்திற்குப் போக வேண்டிய நான் சின்ன ரயிலில் (எஸ்.ஐ.ஆர்.) போகாமல் பெரிய ரயிலில் (எம்.எஸ்.எம்.) போனது என்னை வழி அனுப்ப வந்த என் சினேகிதிகளில் பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் என் 'இலக்ஷிய புருஷனை' நாடி பம்பாய்க்குப் போகிற விஷயம் தெரிந்திருந்தால் அவர்கள் அப்படி ஆச்சரியப்பட்டிருக்கவே மாட்டார்கள்.

நான் பம்பாயை அடைந்ததும், குடும்ப ஸ்திரிகளை வருந்தி வருந்தி அழைத்த ஒரு ஸ்டுடியோ முதலாளியைப் போய்ப் பார்த்துப் பேசினேன். என்னைப் பார்த்ததும் அவருக்கு மிக சந்தோஷம். ஆனால் எனக்கோ ஏமாற்றம்தான். "உன்னைப் போன்ற மிகப் படித்தவர்களெல்லாம் சினிமா நடிகைகளாக வருவது அவ்வளவு கௌரவமானதல்ல" என்று அவர் கூறியபோது என் மனம் உடைந்து போயிற்று. ஆனால் அவர் தொடர்ந்து, "எனக்கு ஒரு அந்தரங்கக் காரியதரிசி தேவையாயிருக்கிறது. ஏன் நீ அந்த வேலையை ஏற்றுக் கொள்ளலாமே" என்று கூறியபோதுதான் போன உயிர் மீண்டும் வந்தது எனக்கு. யோசித்து பதிலளிக்கவே அவர் எனக்கு அவகாசம் அளிக்கவில்லை. "ஆம், அதுதான் நல்லது. அப்படியே செய்!" என்று கூறி, 'ஆர்டரை'யும் கொடுத்து விட்டார்.

மேற்குறித்த ஸ்தானத்திற்கு உண்மையில் வேண்டியவர் அனுபவம் மிக்க ஒரு திறமைசாலிதான். அப்படிப்பட்டவர்கள் எவ்வளவோ பேர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்தும், விஷயம் தெரியாத என்னை அந்த வேலைக்கு முதலாளி அமர்த்தியதற்குக் காரணம், என் சௌந்தரியத்திற்கு அவர் அடிமையாகிவிட்டார் என்பதுதான். முதலாளியின் பார்வையும் பேச்சும் எனக்கு மிகவும் அருவெறுப்பையே அளித்தன. என்றாலும், அந்த வேலையிலிருந்து கொண்டு, மனோஹரை அடைய முயற்சிப்பது சுலபமாக இருக்கும் என்ற எண்ணத்தில் நான் ஒப்புக்கொண்டேன்.

என் எண்ணம் கைகூடும் நாளும் சீக்கிரமே வந்தது. ஒரு நாள் என் முதலாளி என்னை அழைத்து, தாம் அடுத்தபடி தயாரிக்கப் போகும் "இன்பக் கனவு" என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்க மனோஹரைக் கண்டு பேசிவர முடியுமா என்று கேட்டார். நான் என்ன; 'முடியாது' — என்றா சொல்லியிருப்பேன்! என்னைப் போன்ற ஒரு அழகியை

அனுப்பினால் காரியம் சுலபமாய் முடியக்கூடும் என்பது முதலாளியின் எண்ணம் போலும். அதனால்தான் அந்தவேலைக்கு என்னைப் போய் வரும்படி அவர் கூறினார்.

என் கால்கள் நிலத்திலேயே பதியவில்லை; எனக்கு அவ்வளவு மகிழ்ச்சி. குறிப்பிட்ட தினத்தன்று மனோஹரைக் காண நான் ஆயத்தம் செய்து கொண்டேன். உடை அலங்காரம் முடிவதற்கே மூன்று மணி நேரம் பிடித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கடைசியாக என்னுடைய 'இலக்ஷிய புருஷனை' நேருக்கு நேர் சந்தித்தேன். படத்தில் பார்த்ததற்குச் சற்றும் குறைவில்லாமல், நேரிலும் கம்பீரமாகவே தோற்றமளித்தார். 'ஆணைக் கண்டு ஆணே மோகிக்கும் அழகு' என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட அழகன், எடுத்த எடுப்பிலேயேவந்த காரியத்தைப் பற்றிப் பேசாமல் பரஸ்பரம் குசலப் பிரச்னம் நடந்தது. நான் பேசுவதே எனக்குக் கேட்காதபடி என் ஹிருதயம் பட படவென்று அடித்துக் கொண்டது. அவருக்கும் என்னுடன் பேசுவதில் ஒரு அலாதியான விருப்பம் இருந்ததை நான் ஊகித்துக் கொண்டேன். அது, 'என் காரியம் கைகூடும்' என்ற ஊக்கத்தை எனக்கு அளித்தது.

எனக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. அவர் சினிமாத் தொழிலுக்கு 'எப்படி, ஏன் வந்தார். என்பதை அறியவேண்டுமென்பதுதான் அது. எப்படியோமென்று விழுங்கிக்கொண்டு அதை அவரிடம் கேட்டு விட்டேன்.

மகிழ்ச்சி தாண்டவமாடிய அவருடைய வதனம் சட்டென்று வாடியது. கண்களில் நீர் வரட்டுமா என்பதுபோல முட்டிக்கொண்டு நின்றது. ஏதோ பழைய நினைவுகள் தோன்றி விட்டன போலும்! "இதை ஏன் கேட்டோம்" என்று நான் என்னையே சபித்துக் கொண்டேன். ஆனால் அவர் தன் துக்கத்தை சமாளித்துக் கொண்டு பேசலானார்: "என்னுடைய உண்மையான பெயர் உலகநாதன் என்பது. சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்த என்னை சந்ததியில்லாத என் தூர பந்துவான ஒருவர் காப்பாற்றி வந்தார். அவருடைய ஆதரவில் நான் கல்லூரியில் படித்து வந்தேன். என்னைக் காப்பாற்றி வந்த அந்த தர்மவான் தம்முடைய ஆதரவில் வளர்ந்து வரும், ஒரு பெண்ணை மணந்து கொள்ளும்படி என்னைக் கட்டாயப் படுத்தினார். அவர் வளர்த்து வரும் அந்தப் பெண்ணை நான் நேரில் பார்த்ததே கிடையாது. ஆனால் அந்தப் பெண்ணைப் பற்றி நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவருடைய வளர்ப்புப் பெண்ணான அந்தப் பெண் பணத்தின் அருமை தெரியாது, சினிமாப் பித்துப் பிடித்து அலைவதாக நான் கேள்விப் பட்டேன். என்னை வளர்த்த தர்மப் பிரபுவின் இஷ்டப்படி முகமறியாத அந்தப் பெண்ணை நான் மணந்து கொண்டிருந்தால், அந்தப் பெண்ணின் கணவனாக—இல்லை, அவளுடைய தாஸானு தாஸனாக—இருந்து கொண்டு அவரது திரண்ட ஆஸ்தியை அனுபவித்துக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால், அதிருஷ்டவசமாகவோ, துரதிருஷ்ட வசமாகவோ தெரியாது; நான் அப்படிச் செய்யவில்லை. அந்தப் பிரபுவுக்குத் தெரியாமல் நான் பம்பாய்க்குப் புறப்பட்டு வந்து விட்டேன். எனக்கு சிறு பிராயத்திலிருந்தே நடிப்புத் திறமை உண்டு. ஹிந்தியும் நன்றாகப் பேசக் கற்றிருந்தேன். இவைகளுடன்கூட எனக்குத் திரைக்கு ஏற்ற முக அழகும் இருக்கவே சட்டென்று படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. நீங்களே கூறுங்கள். நான் முன் பின் அறியாத—என் மனதிற்குப் பிடிக்காத–அந்த மங்கையை மணக்காமல் வந்துவிட்டது நியாயமா, இல்லையா என்று?"

"அடாடா என்ன ஒற்றுமை!" என்று எண்ணி நான் வியந்தேன். சட்டென்று என்னுள் ஒரு பயம் தோன்றி என் மனதை என்னவோ செய்தது. என் மனவேதனையை மறைக்க ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டேன். "நீங்கள் செய்ததுதான் சரி. ஆமாம், உங்களை வளர்த்த அந்தப் பிரபு யாரென்றும், அவர் குறிப்பிட்ட அந்தப் பெண் யாரென்றும் நான் தெரிந்து கொள்ளலாமோ?" என்று கொஞ்சுதலாக—தயங்கியபடியே கேட்டேன்.

"அடடா, அதைக் கேட்க ஏன் இவ்வளவு தயக்கம். பேஷாகச் சொல்லுகிறேன். அவர் பெயர் மிஸ்டர் சிவப்பிரகாசம். அவர் குறிப்பிட்ட அந்தப் பெண்ணின் பெயர் மிஸ். புஷ்பமாலதி........ அடேடே!.........உங்களுக்கு என்ன உடம்பு?....என்னவோபோல விழிக்கிறீர்களே!......காப்பி வரவழைக்கட்டுமா?" என்று பதறினார் என் 'இலக்ஷிய புருஷன்.'

விழிக்காமல் வேறு என்ன செய்வது? என் சித்தப்பா என்னை மணக்கும்படி சொன்ன வாலிபரை மணக்காது ஓடி வந்தேனே! அதே வாலிபர்தான் உலகநாதன். உலகநாதன்தான் என் 'இலக்ஷிய புருஷன்' மிஸ்டர் மனோஹர்! இதை அறிந்த போது என் நிலை எப்படியிருந்திருக்கும். என்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

அவள் ஒரு 'எக்ஸ்ட்ரா'

சு.ரா.

படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த இடத்தில் ஒரே அல்லோல கல்லோலமாய் இருந்தது. காரணம், கதாநாயகி பாத்திரத்தில் நடித்துக்கொண்டிருந்த பிரபல நக்ஷத்திரம் சாரதா மயக்கம் அடைந்ததுதான்.

விசாலமான ஒரு திறந்த வெளியில் அந்தக் காட்சிக்கு வேண்டிய யாவும் சித்தமாயிருந்தன. 'இந்திரா பிலிம்ஸாரி'ன் பாரத தேசம் என்ற மகத்தான சமூகப் படத்தில், இதுவரை கண்டும், கேட்டுமிராத வகையில், பிரம்மாண்டமான 'வயல் நாட்டியம்' ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார் பட முதலாளியும் டைரெக்டருமான மூர்த்தி.

காட்டுக்கு வழிகாட்ட, உணவு விஷயத்தில் மக்களுக்கு விழிப்பூட்ட, கதாநாயகி கலப்பை ஏந்தி உழுகிறாள். கூட்டுப் பண்ணை முறையைப் பிரசாரம் செய்கிறாள். அவளுக்கு உதவி செய்ய ஆயிரம் தேச சேவிகைகள்! இவ்வளவு பேரும் சேர்ந்து செய்யும் சேவையை ஒரு அருமையான நடனத்தின் மூலம் விளக்க திட்டமிட்டிருந்தார் மூர்த்தி. அதற்காகத்தான் யாவும் தயாராயிருந்தன.

பின்னணி வாத்தியங்கள் இனிமையாய் முழங்கின. ஒலி, ஒளிப்பதிவாளர்கள் தயாராயிருந்தனர். டைரெக்டர், 'ரெடி...ஷுட்!' என்று கூறி வாய்மூடு முன் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்துவிட்டது, கதாநாயகி சாரதா மூர்ச்சையாகி விழுந்தாள், அரைமணி நேரமாய் வெயிலில் நின்றது அவளது தேகவாசிக்கு ஒத்துக் கொள்ளவில்லை. தலையைச் சுற்றிக் கீழே தள்ளிவிட்டது.

அவ்வளவுதான்! வாத்திய முழக்கம் நின்றது. டைரெக்டர், உதவி டைரெக்டர், கேமிராமென், மற்றும் படம் சம்பந்தப்பட்ட அனைவரும் மூர்ச்சையுற்று விழுந்த சாரதாவை சூழ்ந்து கொண்டனர்.

"சீக்கிரம், ஜலம் கொண்டு வா! அப்படியே சூடாகக் காப்பியும் கொண்டு வாருங்கள்!" என்று கூவினார் டைரெக்டர்.

"எல்லோரும் சூழ்ந்து கொள்ளாதீர்கள். சற்றுக் காற்று வரட்டும்" என்றார் படமுதலாளியின் சகோதரர். அவரே படத்தின் உதவி டைரெக்டர்.

"இதற்குத்தான் நான் அப்பொழுதே சொன்னேன். தனித்தனியே படத்தை எடுத்து ஒட்ட வைத்திருந்தால் அந்த அம்மா வெயிலுக்கே வந்திருக்க வேண்டியதில்லை" என்று உரக்கவே முணுமுணுத்தார் ஒளிப்பதிவாளர்.

அதற்குள் குளிர்ந்த ஜலம், சூடான காப்பி யாவும் வந்தன. ஜலம் முகத்தில் பட்டவுடன், சற்று கண்களைத் திறந்த சாரதா, காப்பியைக் குடித்தவுடன் வாயைத் திறந்து, "நான் எங்கேயிருக்கிறேன்?" என்று மென்குரலில் கேட்டாள்.

"ஒன்றுமில்லை. வெயில் உடம்புக்காகவில்லை. கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொண்டால் சரியாகிவிடும்" என்று கூறிவிட்டு, டைரெக்டர், "முத்து! நம்ப 'ப்யூக்'கைக் கொண்டு வா. உடனே ஸ்டுடியோவுக்குப் போக வேண்டும்" என்றார்.

கார் வந்தது. டைரெக்டரும், பட முதலாளியும் 'குசு குசு'வென்று



வெகு நேர்த்தியான எபினேட் ப்ளாக் பௌண்டன் பேனா விலை ரூ. 1—10—0. மார்பிள் சிகப்புப் பேனா ரூ. 2—4—0. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். தபாலில் பெற, முன் பணம் அனுப்பவும்

அப்பர் பௌண்டன் பேனா
8, ரத்தின முதலி தெரு.
(சிவஞானம் பார்க்குக்கு அருகில்)
கொண்டித்தோப்பு,
ஜீ. டி. சென்னை

ஏதோ பேசினர். பட முதலாளி, உதவி டைரெக்டரிடம் ஏதோ கூறிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்தார். சாரதாவையும், டைரெக்டரையும் ஏற்றிக் கொண்டு கார் புறப்பட்டது.

அங்கிருந்தவர்களைப் பார்த்து, உதவி டைரெக்டர், "எல்லோரும் அப்படி அப்படியே சற்று இருங்கள். போட்ட 'செட்' வீணுகக் கூடாது. ஹிரோயின் அம்மா வந்ததும் படப்பிடிப்பு ஆரம்பமாகும்" என்று கூறிவிட்டு, அருகிலிருந்த கூடாரத்துக்குள் போய்விட்டார்.

வெயில் தீவிரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. அந்த மைதானத்தில் சுமார் ஆயிரம் ஸ்திரீ 'உப நக்ஷத்திரங்கள்'—'எக்ஸ்ட்ராக்கள்'— வெயில் தகிக்க நின்று கொண்டிருந்தனர். பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து போடப்பட்ட 'செட்' வீணுகலாமா? அன்று எவ்வளவு நேரமானாலும் அக் காட்சியைப் படமெடுத்து விடுவது என்று டைரெக்டரும், படமுதலாளியும் முடிவு செய்து விட்ட பிறகு, வேறு வழி ஏது?

கதாநாயகி சாரதாவும், அவளைச் சூழ்ந்து கொண்டிருந்தவர்களும் சென்ற பிறகு, அந்த இடத்தில் ஒரு பெண் தனியே நின்றிருந்தாள். அவள் ஒரு 'எக்ஸ்ட்ரா'; பெயர் பிரபா. தொழிலுக்குப் புதிது. யாரோ ஒருவருடைய பலத்த சிபாரிசின் பேரில், 'வயல் நடன'த்துக்காக மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தாள். அதற்காக அவளுக்குக் கிடைக்க விருந்த ஐம்பது ரூபாயில் சிபாரிசு செய்தவருக்கும் ஒரு பங்கு உண்டு!

பிரபாவுக்கு சன்மானத்தைப் பற்றி அக்கரையில்லை. தான் நன்றாக நடனமாடி நல்ல பெயர் பெற்றுவிட்டால், தானும் சாரதாவைப்போல் ஒரு பிரபல நக்ஷத்திரமாகி விடலாமல்லவா? அவளுடைய ஆர்வத்துக்கு ஏற்றபடி, அவளைக் கதாநாயகிக்குப் பக்கத்தில் நின்று ஆட ஏற்பாடு செய்திருந்தனர். அதைக் குறித்து அவளுக்கு அளவற்ற சந்தோஷம் தான்!

ஆனால் ஆரம்பத்திலேயே சாரதா இப்படி மோசம் செய்து விட்டாளே! அதைக் குறித்துத்தான் பிரபா அதிகம் வருந்தினாள். சாரதா மயங்கி விழுந்த போது பிரபாதான் அவளைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இருந்தும், அவ்வளவு பெரிய கும்பலில் அவளை ஒருவருமே கவனித்ததாகத் தெரியவில்லை. அவளுக்கு ஒரு கிண்ணம் குளிர்ந்த ஜலம் கொடுப்பாரும் இல்லை. சாரதாவுக்கே எல்லா உபசாரங்களும் நடந்தன.

"கதாநாயகிக்கும், உப நடிகைக்கும் இவ்வளவு வித்தியாசமா?" என்று, உலகம் அறியாத அந்தப் பெண்ணின் உள்ளம் எண்ணமிட்டது. அவளுடைய நிலைமைக்குச் சற்றும் இரங்காத சூரியன் மேலும் தீக்ஷிண்யமாகப் பிரகாசித்தான்.

கூடாரத்தை விட்டு யாரோ ஒருவர் அடிமேலடி வைத்து, பிரபாவை அணுகினார். எங்கும் நிசப்தம் நிலவியது. தன்னை நோக்கி வந்தவரைக் கூர்ந்து கவனித்தாள் பிரபா. மறு க்ஷணம் வெட்கத்துடன் தலை குனிந்தாள். அந்த மனிதர் அவளை அநுதாபத்துடன் பார்த்தார். "உன் பெயர் என்னம்மா?" என்று கேட்டார்.

"பிரபா......நீங்கள் யாரென்று தெரியவில்லையே?" என்று தடுமாறிக் கொண்டே கேட்டாள் அவள்.

"நான் இங்கப் படத்தின் கதாநாயகனை நடிக்கும் மாதவன்...... ஆமாம்! நீ ஏனம்மா இந்தத் தொழிலுக்கு வந்து அவஸ்தைப் படுகிறாய்?" என்று அன்பொழுகக் கேட்டார் அவர்.

ஏற்கெனவேயே அவளது உள்ளம் வருந்திக் கொண்டிருந்தது. நல்ல பசி; வெயிலில் நின்று கொண்டிருந்த களைப்பு வேறு. ஆகவே, மேற்படிக் கேள்வி அவளது துக்கத்தைக் கிளறி விட்டது.

பதில் சொல்ல முடியாமல் சிறிது நேரம் திணறினாள். பிறகு மெதுவாக, "...நானும் சாரதா மாதிரி நக்ஷத்திரமாக முடியாதா?" என்று கேட்டாள்.

"ஓஹோ! நீயும் நக்ஷத்திரம் ஆக வேண்டும் என்றுதான் சினிமாவில் சேர்ந்தாயா?......ஐயோ, பாவம்! இந்த வெயிலில் இப்படியே இரண்டு நாள் வாடி வதங்கினால் நக்ஷத்திரமாகி விடலாம்!" என்று கூறினார்.

பிரபாவின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. அவளுடைய நம்பிக்கையும் குறைந்தது. அவளுடைய கண்ணீரைக் கவனித்த மாதவன், "அடடா! நீ ஏனம்மா அழுகிறாய்? உனக்குப் புகழ் தேடித்தரத்தானே நான் வந்திருக்கிறேன்.........நான் சொந்தத்தில் ஒரு படமெடுக்கப்போகிறேன். அதில் நீதான் கதாநாயகி. சாரதாவைவிட நீ எந்த விதத்தில் தாழ்ந்தவள்? இனியும் இந்த மாதிரியான பாரபக்ஷத்தை என்னால் சகிக்க முடியாது. ஹூம்! உடனே புறப்படு, போவோம்!" என்று, அவள் கரங்களைப் பற்றிக்கொண்டார் அவர்.

பிரபா ஒரு புறம் மகிழ்ச்சியடைந்தாள். நம்பிக்கை யொளி அவளது முகத்தில் படர்ந்தது, ஆயினும் அந்நிய புருஷன் தன் கரங்களைப் பற்றியதும் அவளுக்கு நடுக்கம் உண்டாயிற்று; விடுவித்துக் கொள்ள மெதுவாய் முயன்றது பயனளிக்கவில்லை.

"உடனே எங்கே போவது? படம் முடிய வேண்டாமா?" என்று கேட்டாள் பிரபா.

"படம் குட்டிச் சுவராய்ப் போகட்டும். இனி ஒரு க்ஷணமும் நாம் தாமதிக்கக் கூடாது" என்றார்.

"நான் வீட்டில் சொல்லி, அனுமதி வாங்கிக் கொள்ள வேண்டுமே" என்று பிரபா கூறினாள். அவர் மெல்ல நகைத்தார்.

"அட, பைத்தியமே! வீட்டிலாவது, சொல்லவாவது! 'பிரபல நக்ஷத்திரமானவுடன்தான் வீட்டின் வாசற்படியை மிதிப்பேன்' என்று சங்கல்பம் செய்து கொள். வா! போகலாம்!" என்று துரிதப்படுத்தினார்; கைகளையும் விடவில்லை,

அரை மனதுடன் இருந்த பிரபா, துணிந்து புறப்பட்டாள், அவருடன்.



சில மாதங்களுக்கு முன் அரங்கேறிய டி. எஸ். ராஜலக்ஷ்மி ஐயர் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கப்போகும் "பிரேமா" தமிழ்ப் படத்தில் நடிப்பார்.

ஆனால், நான்கடி வைப்பதற்குள், கால் இடறிக் கீழே விழுந்தாள்.

கண் விழித்த பிரபா, தான் நின்ற இடத்தில் தூங்கி விழுந்து விட்டதை உணர்ந்து, வெட்கத்துடன் எழுந்து ஆடைகளைச் சரி செய்து கொண்டாள். அதைக் கண்டு மற்றவர்கள் 'கொல்'லென்று சிரித்தனர்.

அதே சமயத்தில் கம்பெனி மானேஜர் அங்கே வந்து, "என்ன, இதை, உன் வீடு என்று நினைத்தாயா? தொழில் செய்யும் இடத்தில் தூக்கம் என்ன?...போ, வீட்டுக்கு! நீ வேலைக்கு வேண்டாம்!" என்று கூச்சல் போட்டார். மறுபடியும் அங்கே சிரிப்பொலி எழுந்தது. தங்களையும் மறந்து மற்ற 'எக்ஸ்ட்ரா'க்கள் சிரித்தனர்.

அவமானமும், வருத்தமும், கோபமும், மற்றும் தான் கண்ட கனவைப் பற்றிய உணர்ச்சிகளும் குமுறி எழ, அவள் வீடுநோக்கி நடந்தாள். அவள், பிரபா—'எக்ஸ்ட்ரா' அல்ல!

சென்ற வருஷத்திய சிறந்த படங்கள்

"வாழ்க்கை"யும், "நவஜீவன"மும் முதல் ஸ்தானம் பெறுகின்றன

சென்னை சினிமா ரஸிகர் சங்கம், இம் மாதம் 7ந் தேதி, 1949ம் வருஷப் படங்கள் சம்பந்தப்பட்ட ஒரு தேர்தலை நடத்தியது. சென்னை நகரிலுள்ள 25 தியேட்டர்களில் மேற்படி ஓட்டெடுப்பு நடைபெற்றது. பாரகன், மினர்வா இரு கொட்டகை மானேஜ்மென்டார் மட்டும் இந்த வோட்டெடுப்பை அனுமதிக்க மறுத்து விட்டனர். மொத்தம் 11,998 ரஸிகர்கள் அன்று ஓட்டுப் போட்டார்கள். அந்தத் தேர்தலின்படி ரஸிகர்களின் முடிவு கீழே தரப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் படங்களில் சிறந்த படம் ஏவி. எம். "வாழ்க்கை". தமிழ் நடிகர்களில் சிறந்தவர் எம். கே. ராதா. தமிழ் தெலுங்குப் பட நடிகைகளில் சிறந்த நடிகை பானுமதி. தெலுங்குப் படங்களில் சிறந்தது "குணசுந்தரி கதை." தெலுங்கு நடிகர்களில் சிறந்த நடிகர் வி. நாகய்யா.

தமிழ்ப் படம்

	ஓட்டுகள்
'வாழ்க்கை'	—2,571
'வேலைக்காரி'	—2,391
'அபூர்வ சகோதரர்கள்'	—1,885
'நவஜீவனம்'	— 577

தமிழ் நடிகர்

எம். கே. ராதா	—1,993
கே. ஆர். ராமசாமி	—1,927
டி. ஆர். ராமச்சந்திரன்	—1,267

தமிழ் நடிகை

பி. பானுமதி	—2,025
வைஜயந்திமாலா	—1,676
எம். எஸ். திரௌபதி	—1,386

தெலுங்குப் படம்

'குணசுந்தரி கதை'	—3,477
'லைலா மஜ்னு'	—2,885
'இலு குர்றம்'	— 722

தெலுங்கு நடிகர்கள்

வி. நாகய்யா	—3,615
நாகேஸ்வர ராவ்	—1,958
சிவ ராவ்	—1,924

தெலுங்கு நடிகைகள்

பி. பானுமதி	—5,114
அஞ்சலி தேவி	—1,200
ஸ்ரீ ரஞ்சனி	— 787
சாந்தகுமாரி	— 747

"நவஜீவன"த்திற்கு சர்க்கார் பரிசு

ஸ்ரீ. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி மந்திரியாக இருந்த சமயம், படங்களின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், பிரதி வருஷமும் வெளியிடப்படும் தமிழ், தெலுங்குப் படங்களில் சிறந்ததற்கு சென்னை சர்க்கார் பரிசளிப்பதற்கான ஒரு பரிசுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். 1949-ம் வருஷத்திய சிறந்த படங்களுக்குப் பரிசளிப்பதற்கென சென்னை சர்க்கார் ரூ. 1000 ஒதுக்கி வைத்தனர். இந்தத் திட்டம் முதலில் பரீக்ஷார்த்தமாக ஒரு வருஷத்திற்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள ரூ. 50 பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் ஏற்படுத்தினார்கள். படங்களைப் பரிசிலனை செய்ய, ஸ்ரீமான்கள் கே. வெங்கடசாமி நாயுடு, டி. என். எஸ். ராகவன், வி. ஸி. கோபால ரத்தினம், ஆர். வி. சுவாமிநாதன், ஸ்ரீமதி கைலாஸம்—இவர்கள் அடங்கிய கமிட்டி ஒன்றையும் ஏற்பாடு செய்தனர். அதன்படி 1949-ம் வருஷத்திய சிறந்த படமென, ஜெமினியில் தயாரான. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் "நவஜீவனம்" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் "வாழ்க்கை" "கன்னியின் காதலி" "நவஜீவனம்" ஆகிய மூன்று படங்கள் மட்டுமே கலந்து கொண்டன. மேற்படிக் கமிட்டியின் முடிவை அங்கீகரித்து சென்னை சர்க்கார் "நவஜீவன"த்திற்கே ரூ. 500 பரிசளிக்கத் தீர்மானித்திருக்கின்றனர். இவ்வருஷப் போட்டியில் எந்தத் தெலுங்குப் படமுமே கலந்து கொள்ளவில்லை.

மேற்படி பரிசளிப்பு விழா, சென்னை தனிக்கை போர்டு தலைவரின் தலைமையில் சீக்கிரமே நடைபெறும் என்று சென்னை சர்க்கார் அறிவித்துள்ளனர். தொழிலாளி-முதலாளிகள் பிரச்னையை

பிரபல கோபிநாத்தின் சிஷ்யரான கோபால் சென்ற மாதம் பாண்டிச்சேரியில் நடனம் ஆடினார். வேட்ன், அஜந்தா, சிவா நடனங்கள் பிரமாதமாயிருந்தனவாம். பிரஞ்சிந்திய கவர்னர் அவரை மிகப் பாராட்டினாராம்.

அடிப்படையாகக் கொண்டது "நவஜீவனம்" படத்தின் கதை.

வைஜயந்தி இசைத் தட்டு

"வாழ்க்கை"யில் வைஜயந்தியின் வாய் மூலம் நீங்கள் கேட்ட இசைத் தட்டுகள் எங்கு திரும்பினாலும் ஒலிக்கின்றன. இவை வைஜயந்தியால் பாடப்பட்டவை அல்ல. ஆனால் வைஜயந்தியும் இனிமையாகப் பாடும் திறமை உள்ளவரே. அவரைப் பாட வைத்து பிரபல எச். எம். வி. கிராமபோன் கம்பெனியார் முன்பே ஒரு இசைத் தட்டை வெளியிட்டிருக்கின்றனர். என் 28122 நம்பருள்ள இந்த இசைந் தட்டில் வைஜயந்தி, "இங்கு வாராயோ என் கண்ணனே," "கனவானதேனோ" ஆகிய இருபாட்டுகளையும் பாடியிருக்கிறார். இந்த இசைத் தட்டுகள் எச். எம். வி. கம்பெனியாரிடம் கிடைக்குமாம்.

ஆர். எஸ். மணியின் புது முயற்சி

"கிருஷ்ண பக்தி"யை டைரெக்ட் செய்த பிரபல டைரெக்டர் ஆர். எஸ். மணி தற்போது ஒரு புது முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். படங்களுக்கு அஸ்திவாரம் ஸீனரியோ அல்லவா! இதையும் கதை, வசனம் முதலியவற்றையும் அவர் படமுதலாளிகளுக்குத் தயாரித்துக் கொடுக்க முற்பட்டிருக்கிறார். அப்படியே டைரெக்ஷன் வேண்டுமானாலும் செய்வார். இதற்காக தியாகராய நகர் கோபால கிருஷ்ணா ரோட்டில் ஒருகாரியாலயத்தைத் திறந்திருக்கிறார். ஸ்ரீ. மணியின் சேவை படமுதலாளிகளுக்கு மிக பயன்படுமென்பதில் சந்தேகமில்லை.

ஜிதனின் சொந்தப் படம்

ஜிதன் பானர்ஜி தம் சொந்தத்தில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறாராம். லலிதா, பத்மினி இப்படத்தில் பிரதம பாகத்தில் நடிப்பார்களாம்.

[16ம் பக்கத் தொடர்ச்சி]

சுந்தரி பாயின் தாய் பாஷை மராத்தி என்றாலும் அவருக்கு தமிழ் பாஷை நன்றாகத் தெரியும், மற்றும் ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளைப் பேசவும், எழுதவும் அவர் கற்றிருக்கிறார். கணீரென்ற குரலைப் பெற்றிருக்கும் அவர் ஆரம்ப காலத்திலேயே சங்கீதத்தில் மிகுந்த சிரத்தை காட்டியிருந்தால், இப்பொழுது ஒரு தேர்ந்த பாடகியாக விளங்கியிருக்கக்கூடும். கொஞ்ச காலம் அவர் சங்கீத சிக்ஷை சொல்லிக் கொண்டு அதோடு விட்டுவிட்டார்.

மாநிறமும், நடுத்தர உயரமும் உடைய சுந்தரி பாய் கள்ளங் கபடமற்ற சுபாவமுடையவர். யாரிடமும் சகஜமாகப் பேசிப் பழகும் குணமுள்ளவர் அவர். வாயளவிலன்றி செயலளவிலும் எளிய வாழ்க்கை நடத்தி வரும் சுந்தரி பாய் ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகை என்பது சந்தேகமற்ற விஷயம். அதற்கேற்ற யோக்யதாம்சங்களும் அவரிடம் பொருந்தியுள்ளன. இனி தயாரிக்கும் படங்களில் ஜெமினி அவரது திறமைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

நடனம் ஆடினர்

சிறு பெண்களின் நடனக் கச்சேரிகளில், சாத்விகாபிநயத்தை விசேஷமாக எதிர்ப்பார்க்க முடியாது. ஆங்கிகம் மட்டும் சுத்தமாக அமைந்திருந்தாலே திருப்தியான கச்சேரி என்று கொள்ள வேண்டும். இதைப் போலவே, மயிலை ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் இம்மாதம் 6-ந் தேதியன்று நடந்த (டாடா இரும்பு கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ. டி. என். கிருஷ்ணய்யரின் புத்ரி) பேபி ராதாவின் அரங்கேற்றம் ஆங்கிகப் பிழைகள் அதிகமின்றி அமைந்திருந்தது. பேபிகளின் அரங்கேற்றல்களில் சாதாரணமாய் காணப்படும், சோர்வு, வெறுப்பு, முதலியவை களின்றி, "கமாஸ்" ராகத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்த நீண்ட நேர வர்ணத்தையும் ஆர்வம் குன்ருது ஆடியது விசேஷமாக சொல்லப் படவேண்டிய அம்சம். மற்றபடி, பதங்களில் ரஸபாவங்கள் பூரணமாக இல்லை யென்ருலும், அசைவுகளை லாகவத்துடன் ஆடினர்.

இப்போது எல்லா கச்சேரிகளிலுமே நிரந்தர இடம் பெற்றுள்ள 'காலைத் தூக்கி', 'நடனம் ஆடினர்', முதலிய பாட்டுகளுக்கு அபிநயமும், பாம்பாட்டி நடனமும் அன்றைய கச்சேரியிலும் இடம் பெற்றிருந்தன.

நடனத்திற்கு மிகவும் முக்கியமான "உடல் லாகவம்" பேபி ராதாவிடம் இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. சொல்லி வைத்தவரை தவறுகளின்றியும், ஊக்கத்துடனும் ஆடிய அன்றைய அரங்கேற்றலைக் கொண்டே, 'இன்னும் தொடர்ந்து பயிற்சி பெற்ருல் கலைத் தொண்டின் வருங்கால சரித்திரத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளுவார்' என்று சொல்ல இடமிருக்கிறது.

அநேக நடனக் கச்சேரிகளுக்கு பதங்கள் பாடியுள்ள வி. சதாசிவம், தமது இனிய சாரீரத்தால் அன்றைய கச்சேரியையும் சோபிக்கச் செய்தார், நட்டுவனர் வீரபாகு ஒதுவாமூர்த்தியிடம் சிக்ஷை பயின்றவர் பேபி ராதா.

—"நந்தி"

1950-51ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1950-51ற்குள் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினல், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனல் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனல் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHREE SATNARAIN JYOTISH ASHRAM, (G.M.) Nakodar (Punjab).

பிரம்மலோகம்

மந்திரி குமாரி

மாடர்ன் தியேட்டர்ஸின் "மந்திரி குமாரி" படப்பிடிப்பு முடிவடையும் நிலையில் இருக்கிறதாம். டங்கனுக்குப் பதில் படத்தை டி. ஆர். சுந்தரமே டைரெக்ட் செய்து வருகிறாராம். படம் அடுத்த மாதம் 3-வது வாரத்தில் திரையிடப் பட்டு விடுமாம். இப் படத்திற்கென லலிதா-பத்மினி படகோட்டும் காக்ஷி ஒன்று பிரமாதமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறதாம். இப்படத்தில் வரும் படகோட்டிப் பாட்டும், கன்றுக்குட்டிப் பாட்டும் ஜனரஞ்சகமான பாட்டுகளாக இருக்குமாம். மாதுரி தேவி, எம். ஜி. ராமச்சந்திரன், நம்பியார் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

இதய கீதம்

ஸிடாடல் பில்ம் கார்ப்பரேஷனின் "இதய கீதம்" படப் பிடிப்பு முடிவடைந்து, இப்பொழுது நகாஸ் வேலைகள் நடைபெற்று வருகின்றனவாம். ஜோஸப் தளியத் இப் படத்தை சிறந்த முறையில் தயாரித்து முடித்திருக்கிறாராம். மஹாலிங்கம், ராஜகுமாரி, சுசிலா, டி. பி. ராஜலக்ஷ்மி, கே. சாரங்கபாணி முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்தப் படத்திலும் மஹாலிங்கத்தின் பாட்டுகள் சில வெகு இனிமையாக அமைந்திருக்கின்றனவாம். இப்படம் ஜூன் மாதம்வெளியிடப்படும்.

மர்மயோகி

ஜூபிடரின்—ராம் நாத் சேகர் தயாரிப்பான "மர்மயோகி" ராபின் ஹூட் என்ற ஆங்கிலக் கதையைத் தழுவியதாம். ஜூபிடர் இப்படத்தை அடுத்து வெளியிடத் திட்டம்போட்டிருக்கிறார்கள். ஆகவே, படம் வெகு ஜரூராகத் தயாராகி வருகிறது. அஞ்சலி தேவி, மாதுரி தேவி, எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம், சிறுகளத்தூர் சாமா முதலியவர்கள் நடிக்கும், இப்படம் ஹிந்தியிலும் "உதய பானு" என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ராணி

ஜூபிடர் பிக்சர்ஸார் தமிழ்—ஹிந்தி இரு பாஷைகளிலும் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கும் மற்றொரு படம் "ராணி" ஆகும். "லவ்ஸ் ஆப் கார்மென்" என்ற ஆங்கிலக் கதையைத் தழுவி, ஏ. எஸ். ஏ. சாமி எழுதியுள்ள கதை, இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமியே டைரெக்ட் செய்கிறார். பானுமதி பிரதம பாகத்தில் நடிக்கிறார். வட இந்தியாவின் பிரபல பாடகியான லதா மங்கேஷின் மூன்று பாட்டுகள் இப்படத்திற்காக சமீபத்தில் பதிவாகியதாம். இப்படத்தில் நல்லதொரு பாகத்தில் நடிக்க லக்ஷ்மி பிரபா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

ஓர் இரவு

ஏவி.எம். "ஓர் இரவு" அவர்கள் ஸ்டுடியோவில் ப. நீலகண்டனின் டைரெக்ஷனில் படமாகி வருகிறது. சமீபத்தில், கே. ஆர். ராமசாமிக்கும், டி. எஸ். பாலய்யாவுக்கும் நடக்கும் சண்டை ஒன்றும், கே. ஆர். ராமசாமி திருட்டுக் குற்றத்திற்காக விசாரித்து தண்டிக்கப்படுவதுமான காக்ஷிகள் படமாக்கப்பட்டன. மற்றும் இப்படத்தில் பி. எஸ். கோவிந்தனும், பி. கே. சரஸ்வதியும் நடித்து வருகின்றனர். லலிதா பத்மினியை ஜயந்திமாலா இவர்களின் நாட்டியத்தையும் படத்தில் காணலாம்.

மச்சரேகா

சுகுமார் ப்ரொடக்ஷன்ஸின் "மச்சரேகா" ஜூன் மாதக் கடைசியில் திரையிடப்படும் என்று தெரிகிறது. இப்படத்திற்கான இறுதிக் காட்சிகள் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தற்பொழுது முடிவடைந்து வருகின்றன. மஹாலிங்கம் இப் படத்தில் பாடியுள்ள 'அன்றொரு நாள் குட்டி' என்ற பாட்டு ரஸிகர்களுக்குக் காலஞ் சென்ற எஸ். ஜி. கிட்டப்பாவை நினைவூட்டும் முறையில் அவ்வளவு இனிமையாக அமைந்து போயிருக்கிறதாம். மற்றும் இப்படத்தில் எஸ். வரலக்ஷ்மி, சாந்த குமாரி, குமாரி கமலா ஆகியோரும் நடிக்கின்றனர்.

வன சுந்தரி

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸின் "வன சுந்தரி" பாதிக்கு மேல் தயாராகி விட்டதாம். இப்படத்தில் ஒரு புதுமையை வைத்துக் கொண்டு பல தமாஷான வேலைகளைச் செய்கிறாராம்—ராஜராம் பண்டிதராக நடிக்கும் புளிமூட்டை, எஸ். வரலக்ஷ்மி பாடியுள்ள 'நானே மஹாராணி' என்ற பாட்டு வெகு இனிமையாய் அமைந்து விட்டிருக்கிறதாம். 'காதல் கதை ஒன்று சொல்லுவேன்' என்ற பி. ஏ. பெரியநாயகியின் இனிமையான பாட்டுக்கு வி. ஆர். ராஜகுமாரியும் மற்றும் சில பெண்களும் ஆடும் நடனம் ஒன்றும் படமாகியதாம் சமீபத்தில். ராஜகுமாரி, சின்னப்பா, எஸ். வரலக்ஷ்மி, பாலய்யா கிருஷ்ணன்—மதுரம் இதில் நடிக்கின்றனர்.

இது செய்தி

நாகூர் ஸினி ப்ரொடக்ஷன்ஸ்

டைரெக்டர் நாகூர் தமது சொந்தத்தில் 'நாகூர் ஸினி ப்ரொடக்ஷன்ஸ்' என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். அவர் முதலில், (பத்மநாப ப்ரொடக்ஷன்ஸாரின்) பாதியில் நின்று போயிருக்கும் "சந்திரவங்கா" தெலுங்குப் படத்தை ஏற்று, தம் மேற்பார்வையில் சில புதிய நக்ஷத்திரங்களையும் சேர்த்துத் தயாரித்து முடிப்பாராம்.

ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கம்

சென்ற மாதம் 30-ம் தேதி ஸினி டெக்னீஷ்யன்கள் சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம் நடைபெற்றது. புதிய வருஷத்திற்கான நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'மாட்டினி' கிடையாது!

மின்சார சக்தி உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருப்பதனால், மைசூர், பெங்களூர் நகரங்களில், நிலைமை சீர்பெறும் வரை 'மாட்டினி' காக்ஷிகளை நடத்தக்கூடாதென சர்க்கார் அறிவித்திருக்கிறது.

'42'க்குத் தடை

பம்பாய் தணிக்கை போர்டாரால் அங்கீகரிக்கப்பட்ட "42" என்ற ஹிந்திப் படத்தை, சென்னை மாஹாணத்தில் எங்கும் திரையிடக் கூடாதென சென்னை சர்க்கார் தடை விதித்திருக்கின்றனர்.

பர்மா ஷெல் எக்ஸிபிஷன்

பிரபல மோட்டார் எண்ணெய் வியாபாரிகளான பர்மா ஷெல் கம்பெனியார் சென்ற மாத இறுதியில், சென்னை ஸெயின்ட் மேரீஸ் ஹாலில் ஒரு எக்ஸிபிஷனை ஏற்பாடு செய்திருந்தார்கள். சென்ற இருபது வருஷங்களில் அவர்கள், தாங்கள் கையாண்ட விளம்பர முறைகளை விளக்கும் நோக்கத்துடன் மேற்படி எக்ஸிபிஷனை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்கள் தங்கள் சரக்குகளைப் பற்றி பல விதங்களில் செய்திருந்த விளம்பரங்கள் எக்ஸிபிஷனில் வைக்கப்பட்டிருந்தன. சென்ற மாதம் 25-ந் தேதியன்று பத்திரிகைக்காரர்களை தங்கள் எக்ஸிபிஷனை பார்க்க அவர்கள் அழைத்து உபசரித்தார்கள். கம்பெனி மானேஜர் ஸ்ரீ. சோர்பியும், விளம்பர அதிகாரி ஸி. எம். சங்கரலிங்கமும் பத்திர்கைக்காரர்களை வரவேற்று, தேனீர் விருந்து அளித்து, சுற்றிக் காட்டினார்கள். அவர்களது விளம்பர முறைகள் யாவும் பிரமிக்கத் தக்க முறையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

தியேட்டர்காரர்கள்மீது வழக்கு

சென்னையிலுள்ள பத்து தியேட்டர் நிர்வாகிகள்மீது, 'தொழில் கோர்ட் தீர்ப்பை மீறியதாக' ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சென்ற மாதம் 26-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இம் மாதம் 22-ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

புத்தகாலயப் பொன்விழா

நாகர்கோவிலைச் சேர்ந்த இரவிபுதூரிலுள்ள ஸ்ரீ. சண்முகானந்த புத்தகாலயத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் இம் மாதம் 9-ம் தேதி வெகு சிறப்பாகக்

நந்தலால் புரொடக்ஷன்ஸின் "மாயா ரம்பா" தெலுங்குப் படத்தில் என். டி. ராமராவும், அஞ்சலி தேவியும் தோன்றும் காட்சி இது.



சென்னையில் தற்போது வெற்றிகரமாய் காண்பிக்கப்பட்டு வரும் விஜயா புரொடக்ஷன்ஸின் "சௌகார்" தெலுங்குப் படத்தில் ஜி. வி. சுப்ப ராவும், ஜானகியும்.

கொண்டாடப்பட்டது. விழா என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இக் கொண்டாட்டத்தில் "கல்கி" ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி, சின்ன அண்ணாமலை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மந்திரி கனம் பக்தவத்ஸலம் முதலியவர்கள் கலந்து கொண்டனர்.

பம்பாயில் என். எஸ். கே. கோஷ்டி

என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியினர் முதன் முறையாக இம் மாதம் 13-ந் தேதி பம்பாய்க்கு விஜயம் செய்தார்கள். பம்பாய் மதுங்காவிலுள்ள தமிழ் சங்கத்தின் உதவி நிதிக்காக 13-ந் தேதி என். எஸ். கே. யின் காந்தி மகான் கதை வில்லுப்பாட்டும், மறுநாள் இந்த கோஷ்டியாரின் "இழந்த காதல்" நாடகமும் நடைபெற்றன.

பாகவதர் பேசினார்

வடக்கு தியாகராயநகர் ஆரம்ப பாடசாலையின் இரண்டாவது ஆண்டு விழா எம். கே. தியாகராஜ பாகவதர் தலைமையில் சென்ற மாத இறுதியில் நடைபெற்றது. அவர் பேசுகையில், பல ரஸமான விஷயங்களை வெளியிட்டார். சிறையில் இருந்த சமயம், அவர் ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய பாஷைகளைப் பேசுவதற்கு கற்றுக் கொண்டாராம். சிறை சென்ற பிறகுதான் அவருக்கு மேடை ஏறிப் பேசும் சக்தி ஏற்பட்டதாம். சிறையில் தாங்கள் கஞ்சி சாப்பிட்டுக் கொண்டிருந்ததாக என். எஸ். கிருஷ்ணன் "பைத்தியக்காரன்" படத்தில் சித்தரித்திருப்பது பொய்யாம். தாங்கள் சுகமாக சாப்பாடுதான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்களாம். என். எஸ். கிருஷ்ணன் சிறையில் இருப்பதையே விரும்பினாராம். பாகவதரோ விடுதலையை விரும்பினாராம்.

காந்தி ஸ்தூபிக்கு உதவி நாடகம்

சென்னை கடற்கரையில் கட்ட ஏற்பாடாகும் காந்திஜி ஸ்தூபிக்கு நிதி சேர்க்க சென்ற மாதம் 23-ந் தேதி என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியாரின் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணன்–மதுரம் கோஷ்டியார் "வாழும் வகை", "ஐம்பதும் அறுபதும்" என்ற நாடகங்களை நடித்துக் காட்டினார்கள். இரண்டு நாடகங்களுக்கும் இடையில் கிருஷ்ணனின்

‘காந்தி மகான் கதை வில்லுப் பாட்டு’ நடைபெற்றது.

‘அப்ஸானா’

ஹிந்திப் படமான “அப்ஸானா” இவ் வருஷத்திய சிறந்த ஹிந்திப் படமாக இருக்குமாம். திருபுவன் ப்ரொடக்ஷன்ஸாரின் இப் படம் பம்பாய் எம்அண்ட் டி ஸ்டுடியோவில் பி. ஆர். சோப்ராவின் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. அசோக் குமார் இப்படத்தில் இரு பாத்திரங்களில் நடிக்கிறார். மற்றும் அழகி வீணா, குல்தீப், பேபி தாபுஸும் முதலியவர்களும் நடிக்கின்றனர்.

ஸ்ரீ தியாகய்யர் விழா

திருவல்லிக்கேணி ஸ்ரீ சரஸ்வதிகான நிலையத்தினர் தங்களது சொந்தக் கட்டடத்தில், இம்மாதம் 6-ந் தேதி முதல் ஆறு தினங்களில், தியாகய்யர்வாள் விழாவையும், ஜவந்தரைக் கொண்டாட்டத்தையும் நடத்தினார்கள். ஆராதனை. பஜனை, சங்கீதக் கச்சேரிகள், ஹரிகதா காலக்ஷேபங்கள் முதலியவை நடைபெற்றன.

பிரகதியின் புதிய நிர்வாகம்

பிரகதி ஸ்டுடியோவின் நிர்வாகத்தை ஜூபிடர் பிக்சர்ஸாரிடமிருந்து ஆர். கே. எஸ். பிக்சர்ஸார் பெற்றுவிட்டார்கள். ஆர். கே. எஸ். பிக்சர்ஸின் “தேவ மனோஹரி” தெலுங்குப் பட வேலையும், டி. பி. சுந்தரத்தின் “மாயா ரம்பா” படப் பிடிப்பும் இங்கு ஆரப்பமாகி விட்டன. ராயல் டாககீஸாரின் “சுதர்ஸன்” படப் பிடிப்பும் இங்கு ஆரம்பமாகலாம் என்றும் தெரிகிறது.

ராஜகுமாரி தியேட்டர்

சென்னை தியாகராய நகரில் பிரபல சினிமா நடிகை டி. ஆர். ராஜகுமாரி கட்டி முடித்துவரும் தியேட்டரை, ‘சித்ரா டாக்கீஸ்’ முதலாளிகள் ஏற்று நடத்துவார்கள் என்று தெரிகிறது.

ஹிந்தி சகுந்தலா

சந்திரபிரபா சினிடோன் கம்பெனியார் எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடித்த தமிழ் “சகுந்தலா”வை ஹிந்தியாக்கும் முயற்சியை எடுத்து வருவதாகத் தெரிகிறது. துஷ்யந்தனாக பிருதிவி ராஜும், கணவராக நாகய்யாவும் நடிக்கக் கூடுமாம்.

விஞ்ஞானி

ஜூபிடர் பிக்சர்ஸார் “விஞ்ஞானி” என்ற ஒரு படத்தை ஹிந்தி-தமிழ் ஆகிய இரு பாஷைகளில் தயாரிக்கத் திட்டம் போட்டு வருகிறார்களாம். ஹிந்திப் படத்தில் ஹரிந்திரநாத் சடோ

தியேட்டர்களுக்கு லைசென்ஸ்

சர்க்காரின் புதிய உத்திரவு

சினிமோட்டோகிராப் சட்டத்தின் கீழ், டூரிங் கொட்டகைகளுக்கும் நிரந்தரக் கொட்டகைகளுக்கும் லைசென்ஸ் வழங்குவது சம்பந்தமாக, சர்க்கார் இம்மாதம் 5-ம் தேதி ஒரு புதிய உத்திரவைப் பிறப்பித்திருக்கின்றனர். இந்தப் புதிய உத்திரவு மூலம் ஏற்கெனவே உள்ள பழைய சட்டம் ரத்து செய்யப்படுகிறது. புதிய உத்திரவின்படி, தியேட்டர்களின் எண்ணிக்கை ஜனத் தொகையை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கும். ஆனால் 50,000 ஜனத் தொகைக்கு மேற்பட்ட இடங்களை இவ்வுத்திரவு கட்டுப்படுத்தாது.

சர்க்காரின் புதிய உத்திரவு கீழ்க்கண்ட முறையில் உள்ளது :

20,000 முதல் 30,000 வரை ஜனத் தொகையுள்ள நகரங்களுக்கு ஒரு நிரந்தரக் கொட்டகையும், ஒரு டூரிங் கொட்டகையும் அனுமதிக்கப்படும். 30,000க்கு மேல் 40,000 வரைஜனத்தொகை உள்ள நகரங்களுக்கு மற்றுமொரு நிரந்தரக் கொட்டகை அனுமதிக்கப்படும். 40,000-க்கு மேற்பட்டு 50,000 வரை ஜனத் தொகை உள்ள நகரங்களுக்கு இரண்டு நிரந்தரக் கொட்டகைகளும், இரண்டு டூரிங் கொட்டகைகளும் அனுமதிக்கப்படும், 50,000 ஜனத் தொகைக்கு அதிகப்பட்ட நகரங்களில், ஒரு நிரந்தரக் கொட்டகைக்கு மூன்று மைல் தூரத்திற்குள் டூரிங் கொட்டகைக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. 10,000 முதல் 20,000 வரை ஜனத் தொகை உள்ள இடங்களில் மூன்று மைல்களுக்குள் நிரந்தரக் கொட்டகை இல்லாதிருந்தால், இரண்டு டூரிங் கொட்டகைகள் அனுமதிக்கப்படும். நிரந்தரக் கொட்டகைகளிடையே உள்ள தூரம் பற்றிக் கட்டுப்பாடுகிடையாது. நிரந்தரக் கொட்டகைகள் தவிர, டூரிங் கொட்டகைகள் அனுமதிக்கப்படும் இடங்களில் அவைகளுக்கு இடையே உள்ள தூரம் ஒரு பர்லாங்குக்குக்குறையாமல் இருக்க வேண்டும். ஒரு நகரத்தின் ஜனத் தொகை, மூன்றுமைல் சுற்று வட்டாரத்திலுள்ள பிரதேசங்களையும், அந்த நகருக்கு வந்து கூடும் மக்களையும் மனதில் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தலைவர் கண்டனம்

தென்னிந்திய டூரிங் கொட்டகைக்காரர்கள் சங்கத் தலைவர் டைரெக்டர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் சர்க்காரின் இந்தப் புதிய உத்திரவைக் கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் பின்கண்ட விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார் :

"இந்த உத்திரவு தென்னிந்தியாவில் டூரிங் கொட்டகைகளின் மறைவைத் துரிதப்படுத்துவதாக உள்ளது. இம்மாத முடிவுக்குள் இந்த உத்திரவு காரணமாக ஐம்பது டூரிங் கொட்டகைகள் மூடப்படலாம். கிராம மக்களுக்குக் குறைந்த செலவில் கிடைத்து வரும் பொழுதுபோக்கிற்கு ஹானி விளைவிப்பதாக இருக்கிறது இந்த உத்திரவு."

சர்க்காரின் உதவி

சமீபத்தில் நடந்தேறிய சினி டெக்னீஷியன் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தில், தலைவர் ஸ்ரீ. பிரசாத் சங்கத்தின் சார்பாக சென்னை சர்க்காருக்கு தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். தங்கள் சங்கத்துக்குக் கட்டடம் கட்டிக் கொள்ளவும், செய்திப் படம் தயாரிப்பது சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தவும், சென்னை சர்க்கார் தியாகராய நகரில் பதினொரு கிரௌண்ட் மனை கொடுத்ததற்குத் தங்கள் வந்தனத்தைத் தெரிவித்து, கட்டட வேலையிலும் ஆராய்ச்சி வேலையிலும் சங்கம் சீக்கிரமே ஈடுபடும்" என்று தெரிவித்தார்.

காந்திஜீ வாழ்க்கை

ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் தயாரித்துள்ள "காந்திஜீ வாழ்க்கை" என்ற டாகுமென்டரி படத்தை சென்ற மாதம் டில்லியில், சபாநாயகர் ஸ்ரீ. மாவ்லங்கர், உதவி சபாநாயகர் ஸ்ரீ. அனந்தசயனம் அய்யங்கார், மற்றும் பல இந்திய பார்லிமென்ட் அங்கத்தினர்கள் பார்த்துப் பாராட்டினார்கள். இப்படம் தேசீய சொத்தாகப் பாதுகாக்கப் படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

இதே படத்தை திருச்சியில், இந்தியப் படையின் தளபதி ஜெனரல் கரியப்பா பார்த்து, பெரிதும் பாராட்டிப் பேசினார்.

பாத்யாயாவும், தமிழ்ப்படத்தில் ஸி. என். அண்ணாத்துரையும் நடிப்பார்களாம். இதே படத்தை 'பால் முனியை நடிக்கச் செய்து ஆங்கிலத்திலும் தயாரித்தால் என்ன?' என்றும் யோசித்து வருகிறார்களாம்!



வாழ்த்துகிறோம்

நமது திருச்சி ஏஜண்ட் ஸ்ரீ. பி. எஸ். வெங்கடேசனின் சகோதரி சௌ. ருக்மணி, சிரஞ்சீவி ஆர். நாராயணனைத் தமது வாழ்க்கைத் துணைவராக அடைந்தார். சென்ற மாதம் 30-ம் தேதி இந்த விவாஹம் கரூரில் நடைபெற்றது.

* * *

கோவையிலுள்ள பிரபல ஷராப் வியாபாரியான ஸ்ரீ. பி. ஏ. ராஜு செட்டியார் இம் மாதம் 4-ம் தேதி சிறந்த முறையில் அக்ஷராப்யாச வைபவத்தை நடத்தினர். அவரது குமாரன் ஸ்ரீ. ஆர். கிருஷ்ணனுடைய செல்வப் புதல்வன் சிரஞ்சீவி கே. கோவிந்தராஜுலுவும், அவரது சகோதரர் மகன் ஸ்ரீ. ஆர். விஸ்வநாதனுடைய செல்வி சௌ. வி. சுப்புலக்ஷ்மியும்தான் அக்ஷராப்யாசம் செய்து வைக்கப்பட்டவர்கள். இதை யொட்டி அன்று மாலை ராஜா தியேட்டரில் ஒரு வரவேற்பு நடத்தப் பட்டது. குமாரி கமலாவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

* * *

சென்னையிலுள்ள பிரபல ஷேர் புரோக்கரும், "பாரிஜாதம்" பத்திரிகையின் பிரசுரகர்த்தாவுமான ஸ்ரீ. வி. எஸ். கிருஷ்ணசாமி தம் புதல்வி சௌ. இந்திராவை, சிரஞ்சீவி எம். பி. ஜகன்னாதனுக்குப் பாணிக் கிரஹணம் செய்து கொடுத்தார். மாலையில் வைஜயந்திமாலாவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

* * *

தாராபுரம் 'வஸந்தா டாக்கீஸ்' மானேஜர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தம் புதல்வன் சிரஞ்சீவி நே. கணபதி சுப்ரமண்யத்தின் உபநயனத்தையும், தம் புதல்வி சௌ. வெங்கடலக்ஷ்மியின் திருமணத்தையும் இம்மாதம் 8-ம் தேதி நடத்தி வைத்தார். சிரஞ்சீவி. கே. துரைஸ்வாமி மணமகன்.

* * *

எஸ். மீரா சாகிப் அண்டு பிரதர்ஸ் என்ற பிரபல ஜவுளி வியாபாரக் கம்பெனியின் பாகஸ்தரான ஸ்ரீ. எஸ். மீரா சாகிப் தமது மகன் ஸ்ரீ. எம். மகமது ஸக்ரையாவின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினர். மணமகள் பிரபல லுங்கி வியாபாரியான ஜனப் எஸ். அப்துல் ஸகூர் சாகிபின்புதல்வி. 11-ம் தேதி யன்று நடைபெற்ற இந்த வைபவத்திற்கு 15ம் தேதி சென்னை ஸெயின்ட் மேரீஸ் ஹாலில் ஒரு வரவேற்பு நடைபெற்றது. விருந்தினர்களை மகிழ்விக்க ஹிந்துஸ்தானி சங்கீதக் கச்சேரி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

வைஜயந்தி வழக்கு அப்பீல்

வைஜயந்திமாலாவுக்கு ஒரு மூன்றாவது மனிதரை கார்டியனாக நியமித்ததை ஆக்ஷேபித்தும், தம்மையே கார்டியனாக நியமிக்க வேண்டுமென்றும் வைஜயந்தியின் தந்தை எம். டி. ராமன் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார். இந்த அப்பீலை எதிர்த்து வசுந்தரா தேவி, எம். டி. ராமன் கார்டியனாக இருக்கத் தகுதியற்றவர் என்றும் ஆகவே அவரை நியமிக்கக் கூடாது என்றும் ஒரு மனுவை தாக்கல் செய்தார். இரண்டு மனுக்களும் இம் மாதம் 10-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரு தரப்பில் ஆஜரான வக்கீல்களும், விசாரணையைக் கோடை விடுமுறைக்குப் பிறகு வைத்துக் கொள்ளவும், அதுவரை ஒரு இடைக்கால ஏற்பாட்டைசெய்யவும் ஒத்துக் கொண்டனர்.

சமீபத்தில், ஒய். எம். ஐ. ஏ. கலைப் பகுதியினர் சென்னை கோகலே ஹாலில் நடத்திய "கானல் நீர்" நாடகத்தில் ஏ. என். நாச்சியப்பன் நடித்தார்.

என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதைக் குறித்து நீதிபதியின் அறையில் விவாதம் நடைபெற்றது. இரண்டு மணி நேர விவாதத்திற்குப் பிறகு நீதிபதி பின்கண்ட முடிவைத் தெரிவித்தார். (1) இடைக்கால ஏற்பாடாக வைஜயந்தியின் நடன ஒப்பந்தங்களை எம். டி. ராமனே செய்யலாம். (2) நடனக் கச்சேரிகளுக்கு உள்ளூரில் ரூ. 1500; வெளியூரானால் ரூ. 2000 ஆக இருக்க வேண்டும். சில விசேஷ சந்தர்ப்பங்களில் மாறுபாடு ஏற்பட்டால் அந்த சமயங்களில் சொத்துக் கார்டியன் சுப்ரமண்ய முதலியாரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். (3) மற்ற விஷயங்களெல்லாம் முந்தின தீர்ப்பில் கூறப்பட்டது போலவே இருக்க வேண்டியது.

வசுந்தரா—வைஜயந்தி சந்திப்பு

இந்த மாதம் 5-ம் தேதியன்று வஸுந்தரா தேவி தம் மகள் வைஜயந்தி மாலாவை முதல் தடவையாக சந்தித்துப் பேசினார். கோர்ட்டார் உத்திரவுப்படி தம் வருகையைப் பற்றி வசுந்தரா தேவி முன்கூட்டியே வைஜயந்திக்கு அறிவித்திருந்தார். இந்த சந்திப்பு வைஜயந்தியின் வீட்டில் நடைபெற்றது. தாயும் மகளும் மூன்று மணி நேரம் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்களாம். அது சமயம் தந்தை எம். டி. ராமன் வெளியே இருந்தாராம்.

வருந்துகிறோம்

பல சினிமாப் படங்களுக்கு பாட்டுகள் இயற்றியவரும், பல படங்களில் உப பாத்திரங்களில் நடித்திருப்பவருமான ஸ்ரீ. பாபநாசம் ராஜகோபாலய்யர் சென்ற மாத இறுதியில் மரணமடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம். இவர் நடிகை வி. என். ஜானகியின் தந்தையும், பிரபல பாபநாசம் சிவனின் மூத்த சகோதரரும் ஆவார்.

குண்டூசி டைரி

மார்ச், 1950

தேதி

1. ''சந்திரிகா'' படத்தின் ஆரம்ப விழா வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றது.

12. எம். கே. வி. நாடக சபாவின் 'அவன் விபசாரியா?' நாடகம் வி. பி. ஹாலில் நடைபெற்றது.

13. தென்னாற்காடு ஜில்லா டூரிங் சினிமா விசேஷ மஹாநாடு கடலூரில் நடைபெற்றது.

18. ஜூபிடரின் ''விஜயகுமாரி'' தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது.

நாடகக் கழகத்தினர் பத்திரிகாசிரியர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார்கள்.

23. தென்னிந்திய சினிமா ஊழியர் சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம் நடைபெற்றது.

25. ஜூபிடரின் ''விஜயகுமாரி'' சென்னையில் மூன்று தியேட்டர்களில் திரையிடப்பட்டது.

நாடகக் கழகத்திற்கு நிதி திரட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவின் முதல் நாடகம் ஆரம்பம்.

காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்–பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசிய குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிஜ போட்டோ படங்கள்; தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் தூய்ப்பதும். இப்புத்தகம் நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை எல்லாம் வெளிப்படுத்துகிறது. கல்யாணம் ஆகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசியபோட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2-12-0. 50 கார்டுகள் சேர்த்திருப்பது விலை ரூ. 5-0-0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

★

M/S FRENCH PHOTO SUPPLY COMPANY (G.M.)

JULLUNDUR CITY.

25. ஒய்.எம்.ஐ.ஏ. மைலாப்பூர் கிளையின் ஹாஸ்டல் தினம் கொண்டாடப்பட்டது.
சென்னை அசோகா டாக்கீஸில் ''திருகுபாடு'' தெலுங்குப்படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது.

ஸாரதி பில்ம்ஸின் ''அக்னிப் பரிக்ஷை'' என்ற படத்தின் ஆரம்ப பூஜா விழா நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

சென்னைக்கு விஜயம் செய்த பில்ம் விசாரணைக் கமிட்டியினருக்கு தென்னிந்திய பில்ம் சேம்பர் ஒரு வரவேற்பு அளித்தது.

27. பில்ம் விசாரணைக் கமிட்டி அங்கத்தினர்கள் சென்னைப் பத்திரிகாசிரியர்களைச் சந்திப்பதற்காக ஒரு கூட்டம் நடைபெற்றது.

ஏப்ரல், 1950

தேதி

2. சென்னை பாரகன் டாக்கீஸிலும், மற்றும் பல நகரங்களிலும் ஏவி. எம். ''வாழ்க்கை''யின் நூறுவது நாள் விழா நடைபெற்றது.

கோவிந்தன் கம்பெனியாரின் ''மருதநாட்டு இளவரசி'' தமிழ் நாட்டில் பல இடங்களில் திரையிடப்பட்டது.

4. விஜயாவின் ''சௌகார்'' தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றது.

7. விஜயாவின் ''சௌகார்'' சென்னையிலும், மற்றும் பல நகரங்களிலும் திரையிடப்பட்டது.

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸபாவின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று.

தமிழ் நாடக நிலையத்தின் 'உமையாள்' நாடகம் வி. பி. ஹாலில் நடிக்கப்பட்டது.

12. ''நாககன்னிகா'' பத்திரிகைக் காட்சி சென்னை சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது.

13. ''நாக கன்னிகா'' தமிழ் நாட்டின் சில நகரங்களில் திரையிடப்பட்டது.

ஒய். எம். ஐ. ஏ. பைன் ஆர்ட்ஸ் சங்கத்தினர் 'கானல் நீர்' நாடகத்தை நடித்தார்கள்.

'அமெச்சூர் ஆக்டர்ஸ் க்ரூப்'பினர் 'மைதிலி' நாடகத்தை நடித்தனர்.

ஸ்ரீ சக்தி சங்கீத கலா ரஸிக நாடக சபா ஆரம்பமாயிற்று.

14. ''மருதநாட்டு இளவரசி'' பத்திரிகைக் காட்சி ஸாகர் டாக்கீஸில் நடைபெற்றது. படமும் அன்றே திரையிடப்பட்டது.

20. ஜெமினி ''நிஷான்'' வெள்ளி விழாக் கொண்டாட்டம் பம்பாயில் நடைபெற்றது.

22. ஜெமினி ஸ்டுடியோவுக்கு ஸ்ரீ. திவாகர் விஜயம் செய்தார்.

23. காந்தி ஸ்தூபி நிதிக்கு என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியின் உதவி நாடகம் நடைபெற்றது.

25. பர்மா ஷெல் கண்காக்ஷியைப் பார்க்க பத்திரிகாசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

29. ஸ்டார்கம்பைன்ஸின் ''விஜயலக்ஷ்மி'' பிராட்வே டாக்கீஸில் திரையிடப்பட்டது.

30. சினி டெக்னீஷியன்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாகாணத்தில் எங்கும் திரையிடக் கூடாதென '42' என்ற படத்திற்கு சென்னை சர்க்கார், தடை விதித்தனர்.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316.

THAT *Fulfils* YOUR NEEDS IN PRINTING

EFFICIENT MANAGEMENT

EXCELLENT PRINTING

முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அநுபவம் அவசியம். நானாவித அச்சு வேலைகளிலும், சிறந்த பிளாக்குகள் தயாரிப்பதிலும் எங்களுக்குள்ள பரந்த அநுபவத்தை உபயோகித்துக்கொண்டு, உங்கள் முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்.

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE..
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST...MADRAS

PHONE 4037

Post Box No. 1569. Telegrams : "PRINTHOUSF"

GUNDOOSI May 1950 Regd. No. M. 4. 24

Printed at COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE,
46, Armenian Street, Madras-1.